# தினபூமி

thinaboomi.com

பூமி: 23 சுற்று: 281 ஆவணி 21

புதுச்சேரி, சனி, செப்டம்பர் 06, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**உக்ரைன் - ரஷ்யா போர் குறித்து மீண்டும் புதினுடன் பேசுவேன்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்**


....2-ம் பக்கம்

**ஜி.எஸ்.டி. வரி விகித மாற்றம் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும்: பிரதமர் நரேந்திரமோடி உறுதி**

...3-ம் பக்கம்

**இந்திய கிரிக்கெட் வாரிய தலைவராகிறார் சச்சின்..? விரைவில் அறிவிப்பு வெளியீடு**

....6-ம் பக்கம்



### முதல்வர் மு.க.ஸ்டாலினின் வெளிநாட்டு பயணத்தில்

# ரூ.13 ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு

## தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வ அறிவிப்பு

சென்னை, செப். 06-

**முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஜெர்மன், இங்கிலாந்து வெளிநாட்டு பயணத்தில் தமிழகத்திற்கு ரூ.13,016 கோடி அளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஐரோப்பிய முதலீட்டு சந்திப்புகளின் போது, இந்துஜா குழுமம், தமிழ்நாடு அரசுடன் மின்சார வாகனம், பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தியில் 5,000 கோடி ரூபாய் முதலீடு செய்திட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, இதன்மூலம் 1,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

### ரூ.13,016 கோடியாக

மேலும், அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் 2 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மூன்றாவது தொழில் முதலீட்டை அறிவித்துள்ளது. சென்னையில் உள்ள அதன் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தை 176 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்திடவுள்ளது. இதன்மூலம், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான முதல்வர் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கான பயணத்தால் தமிழ்நாடு பெற்ற மொத்த முதலீடு 13,016 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் 17,813 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்துஜா குழுமத்துடன்

முதல்வர் மு.க.ஸ்டாலினின் இங்கிலாந்து பயணத்தின் மிக முக்கியமான முன்னெடுப்பாக இந்துஜா குழுமத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளது. தமிழ்நாட்டில் மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்புகளை நிறுவிட அதன் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முதலீடுகள் மேற்கொள்ள இந்தக் குழுமம் திட்டமிட்டுள்ளது, இது, நிலையான இயக்கம் மற்றும் பேட்டரி தொழில்நுட்பங்களுக்கான உலகளாவிய தலைநகராக தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான தொலைநோக்கு பார்வையை முன்னிறுத்துகிறது.

### 3-வது முதலீட்டை..

அஸ்ட்ராஜெனெகாவின் ஜி.ஐ.டி.சி, அஸ்ட்ராஜெனெகாவின் உலகளாவிய செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது, அதிநவீன ஆராய்ச்சி, செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் கண்டுபிடிப்பு மற்றும் மருத்துவ சேவைகள் வழங்குவதில் தொழில்நுட்ப மாற்றத்தை செயல்படுத்துகிறது. இந்நிறுவனம் இரண்டு ஆண்டுகளில்

(கடைசி பக்கம் பார்க்க)



● இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் கல்வியாளர் பிரமிளா பெஸ்டர் உடனிருந்தார்.

### ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில்

# தந்தை பெரியாரின் திருவுருவ படத்தை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

## ஒரு இனத்திற்கே சுயமரியாதை உணர்வை ஊட்டியவர் என புகழாரம்

சென்னை, செப். 06-

**இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில், தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். ஒரு இனத்துக்கே சுயமரியாதை உணர்வை ஊட்டி தலைநிமிர வைத்த தந்தை பெரியாரை இன்றைக்கு உலகம் கொண்டாடி வருவதுதான் தமிழ்நாட்டிற்கும், திராவிட இயக்கத்திற்கும் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில், தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஆற்றிய உரையில், "பல நூறு ஆண்டுகளாக, உலகின் சிறந்த அறிவாளிகளை உருவாக்கும் இந்த ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பேசுவதை நான் பெருமையாக கருதுகிறேன். இப்போது புலங்காகித உணர்வோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

> **தமிழ்நாட்டை கல்வியில், பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சியில், வாழ்க்கைத்தரத்தில், உள்கட்டமைப்பு வசதியில் முன்னேறி இருக்கிறோம். உழைப்பின் சாதனை, உற்பத்தி சாதனையாக மாறி இருக்கிறது. பட்டினிச்சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. வளமான தமிழ்நாடாக வளர்த்ததே திராவிட இயக்கத்தின் சாதனை.**
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

இங்கே நான் தமிழ்நாட்டின் முதல்வர், தெற்காசிய அரசியலை புரட்டிப் போட்ட இயக்கமான தி.மு.க. தலைவர் என்ற தகுதியுடன் மட்டுமல்ல; பெரியாரின் பேரன் என்கிற கம்பீரத்துடன் உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுப் பகலவன் - அறிவாசான் தந்தை பெரியாரின் படத்தை ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் திறந்து வைத்ததை, என்னுடைய வாழ்நாள் பெருமையாக கருதுகிறேன். பகுத்தறிவுப் பட்டொளி, உலகம் முழுக்கப் பரவி வருகிறது என்பதன் அடையாளம்தான் இந்த படத்திறப்பு விழா.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் அறிவுடைய அடையாளம் மட்டுமல்ல; உரிமையின் அடையாளம் இது. மனித உரிமையின் அடையாளம். உலக அடையாளம். அப்படிப்பட்ட பெரியாரின் படம் இங்கு திறக்கப்படுவது என்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்றாகும். தந்தை பெரியாரின் கொள்கை வாரிசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். பலமுறை பெரியாரை நான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக, எங்கள் வீட்டில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிக்கு அவர் வந்திருக்கிறார். அந்த நேரத்தில் நான் அவருக்கு உணவு பரிமாறி இருக்கிறேன். இதை சொல்லும்போதே எனக்கு பெருமையாக இருக்கிறது.

ஒரு இனத்துக்கே சுயமரியாதை உணர்வை ஊட்டி தலைநிமிர வைத்த தந்தை பெரியாரை இன்றைக்கு உலகம் கொண்டாடி வருவதுதான் தமிழ்நாட்டிற்கும், திராவிட இயக்கத்திற்கும் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை. 1983 செப்டம்பர் 21-ஆம் நாள், இதே ஆக்ஸ்ஃபோர்டு யூனிவர்சிட்டியில், வீரமணி கலந்து கொண்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நடந்தது. அது நடந்து கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அதற்குப் பிறகு, இன்றைக்கு மீண்டும் ஆக்ஸ்ஃபோர்டில் தந்தை பெரியாரின் பகுத்தறிவு ஒளி பரவுகிறது.

தந்தை பெரியாருக்கு மிக மிகப் பிடித்த சொல் என்ன என்று கேட்டீர்கள் என்றால், சுயமரியாதை. ஒரு மனிதனுக்கு சுயமரியாதை எண்ணத்தை ஊட்டிவிட்டால், அவன் வெற்றிப் பெற்றிடுவான் என்று சொன்னார். அது மட்டுமல்ல, "உலகத்திலேயே உயிரைக் கொடுத்து பெற வேண்டிய ஒன்றே ஒன்று சுயமரியாதைதான்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். அறிவின் கூர்மைதான் பகுத்தறிவு என்று எடுத்துச் சொன்னதால்தான், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் அவரைப் பற்றி அவர் மறைந்து இத்தனை ஆண்டுகள் கழித்தும் விவாதிக்கிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் புத்தகம் வெளியிடுகிறது. இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

### காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மீண்டும் கனமழை:

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

தருமபுரி, செப். 06-

**ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 32 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.**

கர்நாடகா, கேரளா மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், அணை பகுதிகளிலும் மீண்டும் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு மீண்டும் நேற்று நீர்வரத்து அதிகரித்ததால் தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கே.ஆர்.எஸ். அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரத்து 25 கனஅடியாக வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 18 ஆயிரத்து 461 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கபினி அணைக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரத்து 693 கனஅடி வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 18 ஆயிரத்து 942 கன அடி திறக்கப்பட்டுள்ளது. இந்த இரு அணைகளில் இருந்து வினாடிக்கு 37 ஆயிரத்து 403 கனஅடி நீர் தமிழக காவிரி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலு வழியாக காவிரி ஆற்றில் கரைபுரண்டு தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக வந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி 32 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் அதிகரித்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. விடுமுறை தினமான நேற்று ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். காவிரி ஆற்றில் நீர்வரத்தை இருமாநில எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

### தாக்குதல் நடத்தப்போவதாக திடீர் மிரட்டல்:

# மும்பையில் உச்சகட்ட கண்காணிப்பு

மும்பை, செப். 06-

**மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் 34 இடங்களில் மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்போவதாக வந்த மிரட்டலை தொடர்ந்து, முக்கிய பகுதிகளில் போலீசார் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். மேலும் அங்கு கண்காணிப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.**

மும்பை மாநகர போலீஸ் உதவி மையத்திற்கு வந்த ஒரு தொலைபேசி அழைப்பில், 400 கிலோ ஆர்டிஎக்ஸ் வெடி மருந்துகளை நிரப்பிய 34 வாகனங்கள் மும்பையில் நுழைந்து விட்டதாகவும், அது வெடித்தால் மொத்த நகரமும் அழிந்து விடும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டது. மும்பை போக்குவரத்து போலீசாரின் வாட்ஸ்அப் எண்ணுக்கும் இந்த அச்சுறுத்தல் வந்துள்ளது.

மேலும், அந்த மிரட்டல் செய்தியில், லஷ்கர்-இ-ஜிஹாதி அமைப்பைச் சேர்ந்த 14 பாகிஸ்தான் பயங்கரவாதிகள் இந்தியாவில் நுழைந்து இந்த தாக்குதலை நிகழ்த்த இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மும்பை போலீசார், மாநிலம் முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

மேலும், இந்த மிரட்டல் குறித்து விசாரித்து வருகின்றனர்.

### தமிழகத்தை சேர்ந்த இருவர் உள்ளிட்ட

# ஆசிரியர்கள் 45 பேருக்கு தேசிய நல்லாசிரியர் விருது

## ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கினார்

டெல்லி, செப். 06-

**தமிழகத்தில் இருவர் உள்பட நாடு முழுவதிலுமிருந்து 45 ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருதுகளை ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கினார்.**

ஆசிரியராகப் பணியாற்றி ஜனாதிபதியாக உயர்ந்தவர் ராதாகிருஷ்ணன். அவரை கௌரவிக்கும் வகையில் அவரது பிறந்த நாளான செப்.5-ம் தேதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆண்டுதோறும் இந்த நாளில் கல்வியில் சிறப்பாக செயல்படும் ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது வழங்கி மத்திய அரசு கௌரவித்து வருகிறது.



அந்தவகையில், தமிழகத்தில் இருவர், புதுச்சேரியில் ஒருவர் உள்பட நாடு முழுவதிலும் 45 ஆசிரியர்கள் தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். இந்தாண்டு கல்வியில் சிறந்து விளங்கிய ஆசிரியர்களுக்கு தில்லியில் நடந்த நிகழ்ச்சியில் தேசிய நல்லாசிரியர் விருதை ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கி கௌரவித்தார்.

தமிழகத்தில், சென்னை, மயிலாப்பூரில் உள்ள, பி.எஸ். சீனியர் செகண்டரி பள்ளி முதல்வர் ரேவதி பரமேஸ்வரன், திருப்பூர் மாவட்டம் உடுமலையில் உள்ள பாரதியார் நூற்றாண்டு அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியை விஜயலட்சுமி ஆகியோருக்கு விருது வழங்கப் பட்டது.

# மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

## காவிரி கரையோர மக்களுக்கு எச்சரிக்கை

மேட்டூர், செப். 06-

**16 கண் மதகு வழியாக மேட்டூர் அணைக்கு வரும் 30 ஆயிரம் கன அடி நீர் அப்படியே வெளியேற்றப்படுவதால் காவிரி கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை காரணமாக அங்குள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தும், குறைந்தும் வந்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக இந்தாண்டில் மேட்டூர் அணை 6 முறை நிரம்பியது. இதற்கிடையே கடந்த சில நாட்களாக அதிகரித்து காணப்பட்ட நீர்வரத்து குறைய தொடங்கியது. இதன் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து 16 கண் மதகு வழியாக காவிரி ஆற்றில் திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று முன்தினம் மாலை முதல் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை முதல் நீர்வரத்து மீண்டும் அதிகரிக்க தொடங்கியது. இதன் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து நேற்று காலை 10 மணி முதல் மீண்டும் 16 கண் மதகு வழியாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்த தண்ணீர் அப்படியே காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 800 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. 16 கண் மதகு வழியாக மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் காவிரி கரையோரம் வசிக்கும் மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

மார்க்கெட் விலை நிலவரம்

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -247.01 | -67.55 | 1 சவரன் ₹78,920 | 1 கிலோ ₹1,37,000 | ₹86.02 | ₹100.75 |
| பாயிண்ட் 82,253.46 | பாயிண்ட் 25,082.30 | 1 கிராம் ₹9,865 | 1 கிராம் ₹137.00 | | டீசல் ₹92.34 |




உக்ரைன் - ரஷ்யா போர் குறித்து

# மீண்டும் புதினுடன் பேசுவேன்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்



**வாஷிங்டன், செப். 06-**

உக்ரைன் - ரஷ்யா போர் குறித்து மீண்டும் புதினுடன் பேச உள்ளேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் சேர முயற்சித்ததால் கோபம் அடைந்த புதின் அந்த நாடு மீது போர் தொடுத்தார். குட்டி நாடான உக்ரைனை எளிதில் கைப்பற்றிவிடலாம் என்று மனக்கணக்கு போட்ட புதினுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் நிதி மற்றும் ஆயுத உதவிகள் வழங்கி வருவதால், ரஷ்யாவை எதிர்த்து தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது.

போர் தொடர்ந்து நீடித்து வருவதால் சர்வதேச நாடுகள் கவலை அடைந்துள்ளன. மேலும் போரை நிறுத்துவதற்கான முயற்சிகளை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், புதின் மற்றும் ஜெலன்ஸ்கியை அடுத்தடுத்து சந்தித்தார். எனினும், இந்த பேச்சுவார்த்தையில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை.

சமீபத்தில், சீனாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டின் போது ரஷ்ய அதிபர் புதின் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங், பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினர்.ஐரோப்பிய தலைவர்களுடன் ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி முக்கிய ஆலோசனை நடத்தினார். இந்த சூழலில், வெள்ளை மாளிகையில் அமெரிக்காவின் முக்கிய தொழில்நுட்ப நிர்வாகிகளுடன் அதிபர் டிரம்ப் ஆலோசித்த பிறகு நிருபர்களை சந்தித்தார்.

அப்போது, ரஷ்ய அதிபர் புடின் உடன் விரைவில் பேசுவீர்களா என்று நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு, ''ஆம் நான் பேசுவேன்'' நாங்கள் ஒரு நல்ல உரையாடலைக் கொண்டிருக்கிறோம் என ஜனாதிபதி டிரம்ப் பதில் அளித்துவிட்டு புறப்பட்டு சென்றார். இதனால் உக்ரைன்-ரஷ்யா இடையே நடந்து போருக்கும் முற்றுப்புள்ளி வருமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஆசிரியர் நாளையொட்டி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, செப். 06-**

ஆசிரியர் நாளையொட்டி, ஆசிரியர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், பெற்றோர்கள் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள்! பிள்ளைகள் பெற்றோரை விட ஆசிரியர்கள் சொல்வதையே அதிகம் நம்புகிறார்கள். அந்த மாணவர்களுக்குத் தமிழை, அறத்தை, அரசியலை, அறிவியலை என அனைத்தையும் கற்பித்து அவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் நாள் நல்வாழ்த்துகள்! என கூறியுள்ளார்.

வீடுதோறும் அத்தப்பூ கோலம் போட்டு

# கேரளாவில் ஓணம் பண்டிகை உற்சாகமாக கொண்டாட்டம்



**திருவனந்தபுரம், செப். 06-**

வீடுதோறும் அத்தப்பூ கோலம் போட்டு கேரளாவில் நேற்று ஓணம் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

மலையாள மொழி பேசும் மக்களின் கலாச்சார விழாவான ஓணம் பண்டிகை ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் திருவோண நட்சத்திர நாளில் கொண்டாடப்படுகிறது. கேரளாவில் கொண்டாடப்படும் பாரம்பரியமிக்க இந்த பண்டிகையில் அனைத்து தரப்பு மக்களும் உற்சாகமாக பங்கேற்று மகிழ்வார்கள். கேரள மன்னன் மகாபலி சக்கரவர்த்தியின் நினைவாக இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த நாளில தங்கள் வீடு தேடி வரும் மகாபலி அரசனை வரவேற்கும்விதமாக விதவிதமான பூக்களால் அத்தப்பூ கோலம் இடுவதை வழக்கமாக வைத்து இருக்கிறார்கள் கேரள பெண்கள். கேரளா மட்டுமின்றி தமிழகத்திலும் இப்பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

அவ்வகையில் நேற்று ஓணம் பண்டிகை வழக்கமாக உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. பொதுமக்கள் கேரள பாரம்பரிய உடைகள் அணிந்து, ஓணம் பண்டிகையின் சிறப்பு அம்சமான அத்தப்பூ கோலம் போட்டு, மகாபலி சக்கரவர்த்திக்கு வரவேற்பு அளித்தனர். ஊஞ்சல், வடம் பிடித்து இழுத்தல், உறியடி, பந்து விளையாட்டு, ஓணம் சிறப்பு விருந்து என ஓணம் பண்டிகை களைகட்டி உள்ளது. மேலும் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. கோவில்கள் மற்றும் வீடுகள் பூக்களால் விதவிதமாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.தமிழகத்தில் குமரி மாவட்டத்தில் மலையாள மொழி பேசும் மக்கள் பெருமளவில் வசித்து வருகிறார்கள். இதனால் ஓணம் விழா குமரி மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். அந்த வகையில் நேற்று குமரி மாவட்டத்தில் ஆலயங்களிலும் பொதுமக்கள் சிறப்பு வழிபாடுகள் நடத்தி இறைவனை வழிபட்டனர்.

தங்க சங்கிலியை ஒப்படைத்த

# பெண் தூய்மை பணியாளரை நேரில் அழைத்து பாராட்டிய துணை முதல்வர்



**சென்னை, செப். 06-**

சாலையில் கிடந்த தங்க சங்கிலியை ஒப்படைத்த பெண் தூய்மைப் பணியாளரை நேரில் அழைத்து துணை முதல்வர் உதயநிதஸ்டாலின் பாராட்டியுள்ளார்.

சென்னை மாநகராட்சி அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணியாளராக வேலை பார்ப்பவர் கிளாரா. இவர் நேற்று முன்தினம் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, சாலையில் 1 பவுன் தங்கச் சங்கிலி கிடப்பதை பார்த்தார். தங்கம் இப்போது விற்கும் விலைக்கு அதை அவர் எடுத்துச் சென்றிருந்தால், சில மாத பணத் தேவையை அவரால் பூர்த்தி செய்திருக்க முடியும்.


ஆனால், நேர்மையின் அடையாளமாக விளங்கிய கிளாரா, அந்த தங்கச் சங்கிலியை போலீசிடம் கொண்டு போய் ஒப்படைத்தார். அவரது நேர்மையான செயலை கேள்விப்பட்டவுடன்துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், குடும்பத்துடன் கிளாராவை வரவழைத்து பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

மேலும், இங்கிலாந்தில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் திரும்பி வந்ததும், தங்களை அழைத்து பாராட்டுவார் என்றும் கூறினார்.

இந்த நிலையில், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, தூய்மைப் பணியாளர் கிளாராவை அழைத்து ரூ.10 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கி பாராட்டினார். அப்போது, மாநகராட்சி கமிஷனர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையர் ஜெயசீலன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இந்தியா உடனான உறவை மீட்டெடுக்க வேண்டும்:

# அதிபர் ட்ரம்ப்புக்கு ஜேக் சல்லிவன், கர்ட் எம் கேம்ப்பெல் வலியுறுத்தல்



**வாஷிங்டன், செப். 06-**

இந்தியா உடனான நல்லுறவை அமெரிக்கா மீட்டெடுக்க முடியும் என்றும் மீட்டெடுக்க வேண்டும் என்றும் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், முன்னாள் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கர்ட் எம் சேம்ப்பெல் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான 50% வரி விதிப்பு உள்ளிட்ட காரணங்களால் இந்திய - அமெரிக்க உறவு பின்னடைவைச் சந்தித்துள்ளது. அதே நேரத்தில், இந்தியா - சீனா உறவு கூடுதல் வலிமையைப் பெற்றுள்ளது. இந்நிலையில், இந்தியா - அமெரிக்கா இடையேயான நல்லுறவை அதிபர் டொனால்டு ட்ரம்ப் மீட்டெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக ஜேக் சல்லிவன், கர்ட் எம் சேம்ப்பெல் ஆகியோர் வெளியுறவுத்துறை இதழில் கூட்டாக எழுதியுள்ள கட்டுரையில், "இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு முன் எப்போதும் இல்லாத வகையில் சரிவை சந்தித்துள்ளது. இது வருந்தத்தக்கது.

அதிபர் ட்ம்ப் இந்தியா மீது 50% வரி விதித்தது தவறான நடவடிக்கை. ஒப்பந்தத்துக்கு முன்னோடியாகவே ட்ரம்ப் இப்படி ஒரு நாடகத்தை நடத்தி உள்ளார் என்பதை அமெரிக்க அதிகாரிகள் இந்தியாவுக்கு விளக்க வேண்டும். புதுமை முனைப்பை சீனாவிடம் அமெரிக்கா இழந்துவிடாமல் இருக்க, இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவை மீட்டெடுக்க வேண்டும். இரு நாடுகளின் உறவு, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனா சாகசத்தில் ஈடுபடுவதை திறம்பட தடுத்து வந்தது.

'இந்தியா - பாகிஸ்தான் கொள்கை' அமெரிக்காவுக்கு இருக்கக்கூடாது. இந்தியாவையும் பாகிஸ்தானையும் சமமாக நிறுத்தும் போக்கை டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் தவிர்க்க வேண்டும். சமீபத்திய ஆண்டுகளில் அமெரிக்க கொள்கை இந்தியாவை நோக்கி சாய்ந்துள்ளது. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

பாகிஸ்தான் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காகவும், அணு ஆயுத பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அந்நாட்டுடனான உறவில் அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளது. ஆனால், இந்தியாவின் எதிர்கால நலன்களுக்கு அவை முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. கடந்த காலங்களில் அமெரிக்காவின் மிக முக்கிய சர்வதேச கூட்டாளிகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்ததை ட்ரம்ப் நிர்வாகம் நினைவில் கொள்ள வேண்டும். தற்போதைய நிலை தொடர்ந்தால் அமெரிக்கா, மிக முக்கிய கூட்டாளியை இழக்க நேரிடம். கடந்த வாரம், சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் ஆகியோருடன் பிரதமர் நரேந்திர மோடி காட்டிய நட்புறவு, அமெரிக்கா இந்தியாவை நேரடியாக தனது எதிரிகளின் கைகளில் தள்ளக்கூடும் என்பதை தெளிவுபடுத்தியது." என தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யா, சீனாவை எதிர்கொள்ள ராணுவத்தை தயார் செய்யுங்கள்

## பென்டகனுக்கு அதிபர் ட்ரம்ப் உத்தரவு

**நியூயார்க், செப். 06-**

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் சீனாவின் பெய்ஜிங்கில் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பை சீன ஜின்பிங்குடன் ரசிய அதிபர் புதின் மற்றும் வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் ஆகியோர் பார்வையிட்டனர். அமெரிக்காவிற்கு எதிராக சீனா, ரஷ்யா மற்றும் வடகொரியா இணைந்து சதி செய்வதாக அதிபர் ட்ரம்ப் நேரடியாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் ரஷ்யா, சீனாவை எதிர்கொள்ள இராணுவ தயார்நிலையை கணிசமாக அதிகரிக்க அமெரிக்க பாதுகாப்புத் துறைக்கு (பென்டகன்) உத்தரவு பிறப்பித்துள்ளார். சீனா, ரஷ்யா, வடகொரியா மூன்று நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பு அமெரிக்காவிற்கு எதிராக வலுவடைந்து வருவதற்கான அறிகுறி என்று வாஷிங்டன் நம்புகிறது. ட்ரம்ப்பின் உத்தரவுகளை பென்டகன் தலைவர் பீட் ஹெக்செத் உறுதிப்படுத்தினார்.

இதுகுறித்து ஃபாக்ஸ் நியூஸிடம் பேட்டியளித்த ஹெக்செத், "இந்த நடவடிக்கைகள் போரை நாடுவதற்காக அல்ல, மாறாக வீரர்களின் மன உறுதியை புதுப்பிக்க மட்டுமே. துரதிர்ஷ்டவசமாக, முந்தைய நிர்வாகத்தின் பலவீனமான கொள்கைகள் காரணமாக ரஷ்யாவும் சீனாவும் நெருக்கமாகிவிட்டன. இது அமெரிக்கத் தலைமை இல்லாததற்கான சான்றாகும். அதனால்தான் ஜனாதிபதி ட்ரம்ப் ராணுவத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், தடுப்பு திறனை மறுசீரமைக்க தயாராக இருக்கவும் உத்தரவிட்டுள்ளார். நாங்கள் மோதலை விரும்பவில்லை. சீனா, ரஷ்யா மற்றும் பிற நாடுகளுக்கு நாங்கள் போரைத் தவிர்க்கத் தயாராக இருக்கிறோம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளோம்" என்று கூறினார்.

# அயோத்தி ராமர் கோவிலுக்கு பூட்டான் பிரதமர் வருகை

**லக்னோ, செப். 06-**

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலுக்கு, பூட்டான் பிரதமர் தாஷோ ஷெரிங் டோப்கே நேற்று வருகை தந்தார். ராமர் கோவிலில் சாமி தரிசனம் செய்த அவர், அயோத்தியில் உள்ள பிற முக்கிய ஆலயங்களுக்கு சென்று வழிபாடு செய்தார்.

முன்னதாக இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் மூலம் காலை 9.30 மணியளவில் அயோத்தி விமான நிலையத்திற்கு டோப்கே வந்திறங்கினார். மாவட்ட நிர்வாகத்தால் அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. உத்தர பிரதேச மந்திரி சூர்ய பிரதாப் ஷாஹி, அயோத்தி மேயர் கிரிஷ் பதி திரிபாதி, எம்.எல்.ஏ. வேத் பிரகாஷ் குப்தா மற்றும் அரசு அதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

அமெரிக்க முன்னாள் அதிபர்

# ஜோ பைடனுக்கு தோல் புற்றுநோய் அறுவை சிகிச்சை

**வாஷிங்டன், செப். 06-**

ஜோ பைடனுக்கு தோல் புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவரது அலுவலக செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜோ பைடன் (வயது 82). கடந்த 2021-ம் ஆண்டு ஜனவரி மாதம், அமெரிக்காவின் 46-வது அதிபராக ஜோ பைடன் பதவியேற்றார். அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலிலும் ஜோ பைடன் போட்டியிடுவார் என அறிவிப்பு வெளியானது.

ஆனால் வயோதிகம் உள்ளிட்ட காரணங்களால் அவரை அதிபர் வேட்பாளராக களமிறக்க அவரது சொந்த கட்சியான ஜனநாயக கட்சியில் இருந்தே எதிர்ப்புகள் கிளம்பின. இதையடுத்து அதிபர் தேர்தலுக்கான போட்டியில் இருந்து ஜோ பைடன் விலகினார். அவருக்கு பதில் கமலா ஹாரிஸ் அதிபர் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

இதனிடையே, கடந்த மார்ச் மாதம் ஜோ பைடனுக்கு தீவிர புரோஸ்டேட் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகவும், அவரது எலும்புகள் வரை புற்றுநோய் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியானது. அந்த சமயத்தில் ஜோ பைடன் தனது சமூக வலைதள பக்கத்தில், "புற்றுநோய் அனைவரையும் தொட்டுவிடுகிறது. உங்களில் பலரைப் போல், என் மனைவி ஜில் பைடனும், நானும் கடினமான நேரத்தில் உறுதியாக இருக்க கற்றுக்கொண்டோம்" என்று பதிவிட்டிருந்தார். இந்த நிலையில், ஜோ பைடனுக்கு தோல் புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவரது அலுவலக செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஜோ பைடனின் நெற்றியில் தோல் புற்றுநோய் செல்கள் அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

06-09-2025



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** அநுகூலமான நிலை உருவாகும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். அதிகாரமுள்ள பதவிகள் கிடைக்கும். அரசு ஆதரவால் தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும்.

**ரிஷபம்:-** நீண்ட நாட்களாக திட்டமிட்ட புனிதப் பயணங்கள் மற்றும் தெய்வீக காரியங்கள் ஈடேறும். சுகம் மற்றும் சந்தோஷங்கள் கூடும், மனைவியின் உதவியைப் பெற்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்:-** கோபத்தை அடக்கி அனைவரிடமும் பணிவுடன் நடப்பது நல்லது. மௌனமே கோபத்திற்கு மருந்து. எனவே, எதற்கும் வாய் திறக்காது இருப்பது நல்லது.

**கடகம்:-** இனிய சுற்றுலா, நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதில் மகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் கிடைக்கும்.

**சிம்மம்:-** தனவரவு கூடும். எல்லா நலமும், வளமும் பெருகும். பயணங்களால் மனம் மகிழும். பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்.

**கன்னி:-** இன்று சுமாரான நாள். கல்வியில் தேர்ச்சி பெற கவனம் தேவை. கடின உழைப்பால் தொழில் விருத்தி காணலாம். கௌரவக் குறைவு ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு.

**துலாம்:-** தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள். முயற்சி திருவினையாக்கும் எனவே, முன்னேற முயலுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.

**விருச்சிகம்:-** உற்சாகம் மிக்க உன்னதமான நாள். ஆடை ஆபரணங்கள் சேரும். உடன்பிறப்புகள் உதவி உண்டு. எடுத்த காரியங்கள் அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை கூடும்.

**தனுசு:-** தன லாபம் குறையும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி காண்பது அரிது. திருப்தியான, ருசியான உணவு கிடைக்காது. சுகம் என்பது எட்டாத ஒன்றாக இருக்கும்.

**மகரம்:-** தனவரவு உண்டு. புத்தாடை அணிகலன்கள் ஆகியவற்றை அணிவார், சாத்திர ஆராய்ச்சியில் தேர்ச்சி ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**கும்பம்:-** பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். வாயை அடக்கி வம்புக்கு செல்லாதிருப்பது நல்லது. புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். வாழ்க்கையில் புதிய மாற்றங்கள் நிகழும்.

**மீனம்:-** தனலாபமும், கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். மதிப்பு, மரியாதை கூடும். மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பெண்களின் உதவிகளைப் பெறுவீர்கள்.

ஒன்று படுவோம்... வென்று காட்டுவோம்:

# செங்கோட்டையன் கருத்துக்கு ஆதரவு தெரிவித்து வி.கே.சசிகலா வரவேற்பு

**சென்னை, செப். 06-**

ஒன்று படுவோம்... வென்று காட்டுவோம் என்று தெரிவித்து வி.க.சசிகலா செங்கோட்டையன் கருத்துக்கு ஆதரவு தெரிவித்து வரவேற்பு தெரிவித்துள்ளார்.

வி.கே.சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்ட மாபெரும் ஒரு பேரியக்கம் இது ஏழை, எளிய, சாமானிய மக்களுக்காகவே உருவான இயக்கம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சூளுரைத்ததுபோல் "இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும் இந்த இயக்கம் மக்களுக்காகவே இயங்கும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்த சக்தியாலும் அழிக்கமுடியாத ஒரு பேரியக்கம் என்பதை கழக மூத்த முன்னோடியும், கழக சட்டமன்ற உறுப்பினருமான அன்பு சகோதரர் செங்கோட்டையன் நிரூபித்து இருக்கிறார். பல்வேறு நெருக்கடியான காலகட்டங்களிலும் செங்கோட்டையன் உடனிருந்தவர் தனது உடம்பில் ஓடுவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரத்தம் தான் என்பதை நிரூபித்துள்ளார்.

கழகம் ஒன்றுபட வேண்டும் என செங்கோட்டையன் அவர்களின் கருந்துதான் இன்றைக்கு ஒவ்வொரு தொண்டர்களின் கருத்து தமிழக மக்களின் கருத்தும் இது தான். நானும் இதைத்தான் வலியுறுத்துகிறேன். அன்பு சகோதரர் செங்கோட்டையன் அவர்களைப் போன்று உண்மையான தொண்டர்கள் இருக்கும் வரை திமுக என்ற தீயசக்தி எந்தவிதத்தில் முயற்சி செய்தாலும் அவர்களின் தீய எண்ணம் ஈடேறாது.

இருபெரும் தலைவர்கள் உருவாக்கிய இந்த இயக்கம் ஒரு காட்டாற்று வெள்ளம் போன்றது. இதனை எந்த அணை போட்டும் யாராலும் தடுக்க முடியாது. எனவே, திமுக என்ற தீயசக்தி நம்கழகம் ஒன்றுபட எப்படியெல்லாம் நடைபோட்டு தடுத்தாலும் அவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கி கழகம் மீண்டும் அதே மிடுக்கோடும். செறுக்கோடும் மிளிரும். வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மக்கள் விரோத அரசு வீட்டுக்கு அனுப்பப்படுவது உறுதி. ஒன்றுபட்ட வலிமை மிக்க அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் தான் தமிழகத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட வழிவகை செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்று படுவோம்! வென்று காட்டுவோம்! நாளை நமதே! வெற்றி நிச்சயம்! பேரறிஞர் அண்ணா நாமம் வாழ்க! புரட்சித்தலைவர் நாமம் வாழ்க! புரட்சித்தலைவி அம்மா நாமம் வாழ்க! நன்றி வணக்கம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இங்கிலாந்து, ஆக்ஸ்போர்ட்டில் உள்ள

# ஜி.யு.போப் கல்லறையில் முதல்வர் ஸ்டாலின் மரியாதை



சென்னை, செப். 06-

"ஆக்ஸ்போர்ட் சென்று விட்டு, அங்கு உறங்கும் தமிழ் மாணவரைப் போற்றாமல் வருவது அறமாகுமா. அங்குள்ள ஜி.யு.போப் கல்லறையில் மரியாதை செலுத்திய தருணம்..." என்று முதல்வர் ஸ்டாலின் புகைப்படங்களைப் பகிர்ந்து நெகிழ்ந்துள்ளார்.

இதுகுறித்து தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், "ஜி.யு.போப். 19 வயதில் தமிழ்நாட்டிற்கு வந்தார். தமிழ் மேல் தீராக் காதல் கொண்டார்.

தமிழ்ச்சுவையை உலகறிய திருக்குறள், திருவாசகம், நாலடியார் உள்ளிட்ட நூல்களை மொழிபெயர்த்தார்.

ஆக்ஸ்போர்ட் அறிவாலயத்தில் பேராசிரியராகத் தமிழ்த் தொண்டாற்றினார். ஆக்ஸ்போர்ட் சென்றுவிட்டு, அங்கு உறங்கும் தமிழ் மாணவரை போற்றாமல் வருவது அறமாகுமா. அங்குள்ள ஜி.யு.போப் கல்லறையில் மரியாதை செலுத்திய தருணம்.' எனத் தெரிவித்துள்ளார்.

### அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்கும்

# செங்கோட்டையனின் முயற்சி ஒரு நல்ல முயற்சி: நயினார் வரவேற்பு

ஈரோடு, செப். 06-

அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்கும் செங்கோட்டையனின் முயற்சி ஒரு நல்ல முயற்சி என்று தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கோபியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பரபரப்பு கருத்துகளை வெளியிட்டார். அதன்படி, "ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு எனக்கு 2 வாய்ப்புகள் கிடைத்தன. அ.தி.மு.க. உடைந்துவிடக் கூடாது என்பதற்காக பல்வேறு தியாகங்களை செய்துள்ளேன். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு எடப்பாடி பழனிசாமியை முதல்-அமைச்சர் வேட்பாளராக பரிந்துரைத்தவர் சசிகலா.

ஆட்சி மாற்றத்திற்கு அ.தி.மு.க.வில் இருந்து வெளியே சென்றவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்க வேண்டும். தொண்டர்களின் உணர்வுகளை புரிந்தே இந்த கோரிக்கையை வலியுறுத்தி உள்ளோம். அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்ற அனைவரையும் 10 நாட்களில் ஒருங்கிணைக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், ஒருங்கிணைப்பு பணிகளை நாங்களே மேற்கொள்வோம். வெளியே சென்றவர்களை அரவணைத்தால்தான் நம்மால் வெல்ல முடியும் என்பது எம்.ஜி.ஆர் சொல்லிக்கொடுத்த பாடம்" என்று கூறினார்.

இந்த நிலையில், இதுகுறித்து பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது:- "அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்கும் செங்கோட்டையனின் முயற்சி நல்ல முயற்சி. அ.தி.மு.க. ஒருங்கிணைப்புக்கு தேவைப்பட்டால் நாங்கள் பேசவும் தயாராக உள்ளோம். அனைவரும் ஓரணியில் இணைவது நிச்சயம் நடக்கும். கடைசி ஒரு மாதத்தில் கூட நடக்கும். அரசியலில் எதுவும் நிரந்தரம் இல்லை. எல்லாரும் ஒற்றுமையாக இருந்தால் திமுக ஆட்சியை நிச்சயம் அகற்றலாம்" என்று கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஜி.எஸ்.டி. வரி விகித மாற்றம் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும்

## பிரதமர் நரேந்திரமோடி உறுதி



புதுடெல்லி, செப். 06-

ஜி.எஸ்.டி. வரி விகித மாற்றம் நாட்டின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் தேதி தேசிய ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மத்திய அரசு சார்பில் ஆண்டுதோறும் நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டு வருகிறது. டெல்லியில் நேற்று நடைபெறும் விழாவில் 45 ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு நல்லாசிரியர் விருதினை வழங்கினார்.

இந்த சூழலில் டெல்லியில் உள்ள பிரதமர் நரேந்திர மோடியின் வீட்டில் நல்லாசிரியர்களுக்கு சிறப்பு விருந்து வழங்கப்பட்டது. பின்னர் அவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். அப்போது அவர் பேசியதாவது: ஜி.எஸ்.டி. வரி விகித மாற்றத்தால் இந்த ஆண்டு தீபாவளி கொண்டாட்டம், இரட்டை கொண்டாட்டமாக மாறியிருக்கிறது. ஜி.எஸ்.டி. வரி மேலும் எளிமைப்படுத்தப்பட்டு உள்ளது.

ஜி.எஸ்.டி. வரி அமல் செய்யப்பட்டது இந்திய பொருளாதாரத்தில் மிக முக்கிய சீர்திருத்தம் ஆகும். தற்போது ஜி.எஸ்.டி. 2.0 வரி விகிதம் நவராத்திரியின் முதல் நாளில் அமல் செய்யப்பட உள்ளது. இதன்படி இனிமேல் 5 சதவீதம், 18 சதவீதம் என இரு வரி அடுக்குகள் மட்டுமே அமலில் இருக்கும். புதிய வரி விகிதத்தால் சாமானிய மக்களின் வீட்டுச் செலவு கணிசமாக குறையும். மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். அதேநேரம் ஜி.எஸ்.டி. வரி விகித மாற்றம் நாட்டின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய ஊக்கம் அளிக்கும்.

21-ம் நூற்றாண்டில் இந்தியா மிகப்பெரிய சக்தியாக உருவெடுக்கும். செங்கோட்டையில் சுதந்திர தின உரையாற்றிபோது சுயசார்பு இந்தியா குறித்த கருத்துகளை எடுத்துரைத்தேன். இதுதொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஆசிரியர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஒரு தாய், குழந்தையை பெற்றெடுக்கிறார்.

அந்த குழந்தைக்கு கல்வி போதித்து ஒளிமயமான எதிர்காலத்தை ஆசிரியரே உருவாக்கி கொடுக்கிறார். அந்த வகையில் எதிர்கால இந்தியாவை, ஆசிரியர்களே வடிவமைத்து வருகின்றனர். நாடு முழுவதும் பணியாற்றும் கோடிக்கணக்கான ஆசிரியர்கள், வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அடித்தளமிட்டு வருகின்றனர். அவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

### அறியாமை இருளை நீக்குபவர்கள்:

# விஜய் ஆசிரியர் தின வாழ்த்து

சென்னை, செப். 06-

அறிவு தீபம் ஏற்றி, அறியாமை இருளை நீக்குபவர்கள் என்று ஆசிரியர்களுக்கு ஆசிரியர்கள் தினத்தில் த.வெ.க. தலைவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,அறிவு தீபம் ஏற்றி, அறியாமை இருளை நீக்குபவர்கள். அனைத்துக் குழந்தைகளுமே வெல்ல வேண்டும் என நினைப்பவர்கள். அனைத்துச் சமுதாய மக்களையும் சமமாக பாவித்து, அர்ப்பணிப்பு உணர்வோடு சமத்துவ சமுதாயம் படைக்கப் பாடுபடுபவர்கள். இவர்கள்தாம் கல்விக் கண் திறந்த எம் கொள்கைத் தலைவர் காமராசர் அவர்களின் கனவுகளை மெய்ப்பித்து வருபவர்கள்; ஆம், இவர்கள்தாம் நம் ஆசிரியப் பெருமக்கள். இவர்கள் அனைவருக்கும் எனது இதயப்பூர்வமான வாழ்த்துகளை இந்த ஆசிரியர் தினத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்றமிகு தலைமுறையை உருவாக்கி வரும் நம் ஆசிரியர்களின் நெடுநாள் கோரிக்கைகளை, கொடுத்த வாக்குறுதியின்படி நிறைவேற்றி, அவர்கள் வாழ்விலும் ஏற்றம் காண வழிவகை செய்ய வேண்டும் எனத் தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார்



**சென்னையில் நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்து ஆண்டு முதல் கூடுதலாக நிதியுதவி அளிக்கும் ஆணைகளை 10 கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் சாமிநாதன், கூடுதல் தலைமை செயலாளர் மணிவாசன், நாடக மன்ற தலைவர் வாகை. சந்திரசேகர், செயலாளர் விஜயா தாயன்பன், துறை ஆணையர் கவிதாராமு உள்பட பலர் கலந்து கொண்டனர்.**

### பிரிந்து சென்றவர்களை இணைக்க வேண்டும்:

# செங்கோட்டையன் 10 நாட்கள் கெடு



ஈரோடு, செப். 06-

அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்றவர்களை இணைக்க வேண்டும் என்று அ.தி.மு.க. தலைமைக்கு செங்கோட்டையன் 10 நாட்கள் கெடு விதித்துள்ளார். இது தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- 2024-ல் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருந்தால் 30 இடங்களில் வென்றிருக்க முடியும். அ.தி.மு.க.வில் தொய்வு உள்ளது, பிரிந்து சென்றவர்களை இணைக்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமியிடம் கூறினோம். நத்தம் விஸ்வநாதன், தங்கமணி, அன்பழகன் ஆகியோருடன் சேர்ந்து எடப்பாடி பழனிசாமியை சந்தித்து, வெளியே சென்றவர்களை அரவணைத்தால் மட்டுமே தேர்தலை சந்திக்க முடியும் என கூறினோம்.

வெளியில் சென்றவர்களை இணைக்காமல் ஆட்சி அமைத்துவிடலாம் என கூற முடியாது. அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்தவர்கள், நிபந்தனை இல்லாமல் மீண்டும் வர தயார் என கூறுகிறார்கள். எந்த பொறுப்பும் தேவையில்லை என கூறுபவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆட்சி மாற்றம் தேவை என மக்கள் நினைக்கிறார்கள். அதனால் வெளியில் சென்றவர்களை இணைக்க வேண்டும்.

பிரிந்த தலைவர்களை இணைக்கவில்லை என்றால் நாங்கள் அந்தப் பணிகளை மேற்கொள்வோம். யார், யாரை இணைக்க வேண்டும் என்பது குறித்து பொதுச்செயலாளர் முடிவு செய்து கொள்ளலாம். என்னுடைய கருத்தை கூறி இருக்கிறேன், இது நடக்கவில்லை என்றால் நாங்கள் முயற்சி செய்வோம். 10 நாட்களில் முயற்சி எடுக்கவில்லை என்றால், இதே மன நிலையில் உள்ளவர்களை திரட்டி முயற்சி மேற்கொள்வோம்.

அ.தி.மு.க.வுக்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். எங்களுடைய கோரிக்கையை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்பது தான் எங்களது ஆசை. ஜெயலலிதா கூறியது போல் நூறாண்டு காலம் அ.தி.மு.க. ஆள வேண்டும் என்பதற்கான பணியை தொடங்கியுள்ளோம். நிறைவேற்றவில்லை என்றால் எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்றார்.உங்களை மீண்டும் அமைச்சர் ஆக்கியது எடப்பாடி பழனிசாமி தானே? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு செங்கோட்டையன், தன்னைப் போல் 2009-ல் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டவர் தான் எடப்பாடி பழனிசாமி என்று கூறினார். பிரிந்து சென்ற தலைவர்களை சந்தித்து பேசி விட்டீர்களா? என்ற கேள்விக்கு அது சஸ்பெண்ஸ் என கூறினார்.

# டாக்டர் ராதாகிருஷ்ணன் சிலை திருவள்ளூரில் திறக்கப்படும்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தகவல்

சென்னை, செப். 06-

தமிழக கல்வித்துறை சார்பில் ஆசிரியர் தினவிழா சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலை வகித்தார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவுக்கு தலைமை தாங்கி 396 ஆசிரியர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கினார். 210 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:- ஆசிரியர் தின விழாவில் கடந்த ஆண்டும் கலந்து கொண்டேன். அப்போது சில கோரிக்கைகள் ஆசிரியர்கள் சார்பில் வைக்கப்பட்டது. அதில் பல கோரிக்கைகளை முதலமைச்சர் நிறைவேற்றி உள்ளார். மீதி கோரிக்கைகளையும் அவர் நிறைவேற்றி காட்டுவார்.

திராவிட இயக்கத்துக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. பெரியார் பகுத்தறிவு, சுய மரியாதைக்கான ஆசிரியர், அதனால் தான் அவருக்கு லண்டனில் உருவப்படத்தை திறந்து வைத்து பெரியார் உலகிற்கே சொந்தமானவர் என்பதை முதலமைச்சர் காட்டி இருக்கிறார்.

கலைஞர் மாணவராக இருந்தபோதே பத்திரிகை ஆசிரியராக இருந்து அதன் பிறகும் வாழ்நாள் முழுவதும் பத்திரிகை ஆசிரியராக இருந்தவர். அந்த தலைவர்கள் வழியில் தான் முதலமைச்சர் திராவிட மாடல் வளர்வதற்கு ஆசிரியராக பணியாற்றுகிறார். கிராமங்களுக்கு செல்லும் போது இது தான் வாத்தியார் வீடு என அடையாளம் காட்டுவார்கள். அப்படி பட்ட வாத்தியார்களால் தான் டாக்டர்கள், என்ஜினீயர்கள், விஞ்ஞானிகள் என பலரும் உருவாக்கப்பட்டு வருகின்றனர். சமூக மாற்றத்தை கல்வி மூலம் தான் கொண்டு வர முடியும். ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு புரட்சியாளர் தான். மாணவர்களிடம் பகுத்தறிவு சிந்தனைகளை ஆசிரியர்கள் வளர்க்க வேண்டும். மாணவர்கள் ஏன் எதற்கு என்று கேள்வி கேட்க வேண்டும்.

மாணவர் சமுதாயத்திடம் சமூக அநீதிக்கு எதிரான மனப்பான்மையை வளர்க்க வேண்டும். சமூக அநீதியை எதிர்த்து தான் தமிழக அரசு தனி கல்வி கொள்கையை கொண்டு வந்துள்ளது. இருமொழிக்கொள்கையே போதும் என்று அறிவித்துள்ளது. ஆசிரியர்களின் உழைப்பால் தான் 75 சதவீதம் மாணவர்கள் உயர் கல்விக்கு செல்கிறார்கள். இதை 100 சதவீதமாக உயர்த்த வேண்டும். ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள். பள்ளிகளில் விளையாட்டு வகுப்பை கடன் வாங்கி கணிதம், அறிவியல் பாடங்களை நடத்தாதீர்கள், விளையாடும் நேரங்களில் மாணவர்களை விளையாட அனுமதியுங்கள், அது தான் அவர்களின் உடல் ஆரோக்கியத்தை வளர்க்கும்.

ஆசிரியர் தின விழாவில் ஒரு மகிழ்ச்சியான செய்தியை கூறுகிறேன். டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு திருவள்ளூர் மாவட்டத்தில் சிலை அமைக்கப்படுகிறது, விரைவில் அந்த சிலையை முதலமைச்சர் திறந்து வைப்பார். இவ்வாறு அவர் பேசினார்.

### பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேர வேண்டும்:

# செங்கோட்டையன் கருத்துக்கு ஓ.பன்னீர் செல்வம் வரவேற்பு



போடி, செப். 06-

செங்கோட்டையன் கருத்து சரிதான். பிரிந்து சென்ற அனைவரையும் ஒன்று சேர்ந்தால்தான் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்க முடியும். செங்கோட்டையனின் எண்ணம் நிறைவேற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என்று ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

வ.உ.சி.யின் 154-வது பிறந்த நாளை முன்னிட்டு போடி பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அவருடைய திருவுருவ சிலைக்கு போடி சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் முதல்வருமான ஓ பன்னீர் செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழுவைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் அவரை வரவேற்றனர். பின்பு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கட்சி உருவானத்தில் இருந்தே அ.தி.மு.க. தொடர்ச்சியாக 5 முறை தோல்வி கண்டது கிடையாது. அ.தி.மு.க. பிரிந்து கிடப்பதால்தான் தொடர்ச்சியாக தோல்வியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. கழகத் தொண்டர்களும் பல சோதனைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும் என்றால் அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

அ.தி.மு.க. தொண்டர்களின் இயக்கம். இந்த இயக்கத்தில் தொண்டர்களை யாராலும் வெளியேற்ற முடியாது. கழகம் ஒருங்கிணைய வேண்டும். இதற்காக தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்வோம். கழகத்தின் மூத்த முன்னோடி செங்கோட்டையன். அ.தி.மு.க.வை தோற்றுவித்த எம்ஜிஆர் காலத்தில் இருந்தே மாவட்டச் செயலாளர், தலைமைக்கழக செயலாளர் உள்ளிட்ட பல உயர் பொறுப்புகளை அவர் வகித்து வருகிறார். அ.தி.மு.க.வுக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது. தொண்டர்களை ஒருங்கிணைத்து, அரவணைத்துச் செல்பவர். செங்கோட்டையன் கரு த்து சரிதான். அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்ற அனைவரையும் ஒருங்கிணைத்தால்தான் மீண்டும் ஆட்சி அமைக்க முடியும். அவருடைய எண்ணம் நிறைவேற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்களும் அதற்காகத்தான் முயற்சி செய்கிறோம் இவ்வாறு அவர் கூறினார்.

# செங்கோட்டையன் இன்னும் முழுதும் மனம் திறக்கவில்லை: திருமாவளவன்

மதுரை, செப். 06-

செங்கோட்டையன் மனம் திறந்து பேசப்போவதாக சொன்னார்; ஆனால் அவர் இன்னும் முழுமையாக மனம் திறக்கவில்லை என்று வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறியதாவது:- இது அ.தி.மு.க.வின் உட்கட்சி விவகாரம். அ.தி.மு.க. ஒருங்கிணைய வேண்டும் என கட்சிக்குள் இருக்கும் செங்கோட்டையன் போன்ற மூத்த தலைவர்கள் கோரிக்கை எழுப்பி உள்ளார். செங்கோட்டையன் மனம் திறந்து பேசப்போவதாக சொன்னார்; ஆனால் அவர் இன்னும் முழுமையாக மனம் திறக்கவில்லை. இது அவர் அளித்த பேட்டியில் இருந்து தெரியவருகிறது. யார்?.. யாரை கட்சியில் இணைக்க வேண்டும் என்பதை செங்கோட்டையில் வெளிப்படையாக கூறலாம். அ.தி.மு.க.வை, ஒரு திராவிட இயக்கம்; பெரியார் இயக்கம் என்கிற முறையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மதிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### எடப்பாடி பழனிசாமி தலைமையில்

# விவசாயிகளுடன் நடைபெற இருந்த ஆலோசனை கூட்டம் திடீரென ரத்து

தேனி, செப். 06-

தேனியில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் விவசாயிகளுடன் நடைபெற இருந்த ஆலோசனைக் கூட்டம் திடீரென ரத்து செய்யப்பட்டது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி நேற்று கம்பம், போடி, தேனி ஆகிய இடங்களில் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் செய்ய இருந்தார். இந்த நிலையில், தேனியில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் விவசாயிகளுடன் நடைபெற இருந்த ஆலோசனைக் கூட்டம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் கூட்டத்திற்கு வந்த நிர்வாகிகள், விவசாயிகள் திரும்பி சென்றனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



சிங்கப்பூரில் உள்ளது போன்ற ஒற்றை அடுக்கு ஜி.எஸ்.டியை நோக்கி பயணிப்பது தான் நமது இலக்காக இருக்க வேண்டும்; அதேபோல், பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களும் ஜி.எஸ்.டி வரிவிதிப்பு வரம்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைவுபடுத்த வேண்டும்.

**- அன்புமணி**



பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் கெடு கொடுத்துள்ளனர். இதை பார்த்துக் கொண்டிருந்த டி.டி.வி. தினகரன் வெளியே வந்து விட்டார். ஓ.பி.எஸ். வெளியே வந்து விட்டார். இன்னும் யாரெல்லாம் வெளியே வரப் போகிறார்கள் என தெரியவில்லை. அது மூழ்குகின்ற கப்பல்.

**- செல்வப்பெருந்தகை**



டி.டி.வி. தினகரனுடன் போனில் பேசினேன். அவர் தனது முடிவை மறுபரிசீலனை செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது. ஓ.பி.எஸ்., டி.டி.வி. தினகரன் இருவரும் பெருந்தன்மைமிக்க அரசியல்வாதிகள் என்பதால், அவர்கள் தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். விஜய்க்கு ஒரு கூட்டம் இருக்கிறது, எனவே அவர் தாக்கத்தை ஏற்படுத்துவார்.

**- அண்ணாமலை**



ஜி.எஸ்.டி. மறுசீரமைப்பு அறிவிப்பு வரவேற்கத்தக்கவை வடிவில் இல்லை. அமெரிக்கா நமது மீது விதித்திருக்கிற 50 சதவீத வரி விதிப்பை மடை மாற்றம் செய்வதற்கு பிரதமர் முயற்சிக்கிறார் என்று விமர்சனங்கள் வெளிவந்துள்ளது. சிறுகுறு, நடுத்தர தொழில் செய்யக்கூடியவர்களுக்கு பயன்பட போவதில்லை என வல்லுனர்கள் கூறுகிறார்கள்

**- திருமாவளவன்**



காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் நகராட்சி மேத்தா நகரில் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி, சட்டமன்ற உறுப்பினர் செல்வப் பெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், குன்றத்தூர் நகர மன்ற தலைவர் சத்தியமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தங்கத் தேர் புறப்பாடு: அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்

**சென்னை,செப்.06**

மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர். பி.கே.சேகர்பாபு ஆகியோர் (04.09.2025) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், பெருந்திட்ட வரைவு பணிகளில் ஒன்றான கிரிபிரகாரம் மேம்பாட்டு பணிக்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த தங்கத்தேர் புறப்பாட்டினை மீண்டும் தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, திருச்செந்தூரில் பெருந்திட்ட வரைவின் கீழ் திருப்பணிகள் எடுத்துக் கொண்ட நாள் முதல் அதாவது கடந்த இரண்டு ஆண்டுகளாக பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்திடும் வகையில் தங்கத்தேர் பவனி இல்லாமல் இருந்தது. இன்றைய தினம் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நானும் தங்கத்தேர் பவனியை மீண்டும் தொடங்கி வைத்துள்ளோம்.

முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அமைந்த பின்பு, இந்து சமய அறநிலையத்துறையில் அதன் வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழ்நாடு முழுவதும் திருப்பணிகள் நடைபெற்று இன்றோடு 3,600 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளது. அதில் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி திருக்கோயில்கள் உள்பட 138 முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. தமிழ்க் கடவுள் என போற்றப்படும் முருகபெருமானின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பழனியில் அனைத்துல முத்தமிழ் முருகன் மாநாடு இரண்டு நாட்கள் நடத்தப்பட்டு 21 நாடுகளை சேர்ந்த முருக பக்தர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். திருத்தணி திருக்கோயிலுக்கு பெருந்திட்ட வரைவின் கீழ் திருப்பணிகள் நடைபெற்று வருவதோடு, ரூ. 57.50 கோடி அரசு நிதியில் மாற்று மலைப் பாதை அமைக்கும் பணியும், சுவாமிமலை மற்றும் மருதமலையில் மின்தூக்கி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஒட்டுமொத்தமாக அறுபடை வீடுகளில் மட்டும் ரூ. 887 கோடியில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்செந்தூரில் ஒரே நேரத்தில் 600 நபர்கள் அமர்ந்து உண்ணும் வகையிலான புதிய அன்னதானக் கூடத்தின் முதல் தளம் முடிவுற்று, இரண்டாம் தளம் கட்டும் பணியும், அறுபடை வீடுகளில் திருச்செந்தூரை தவிர இதர திருக்கோயில்களை ஒரே இடத்தில் தரிசனம் செய்திடும் வகையில் சூரசம்கார மண்டபத்தின்அருகில் அமைக்கும் பணியும் நிறைவுறும் நிலையில் உள்ளது. பெருந்திட்ட வரைவின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடித்திட வேகப்படுத்தி வருகின்றோம்.



இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ. 75 கோடி செலவில் 134 புதிய மரத்தேர்கள் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டு. அதில் 28 திருத்தேர் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. ரூ 19.20 கோடி செலவில் 72 திருக்கோயில்களில் 75 திருத்தேர்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருத்தேர்களை பாதுகாக்கும் வகையில் ரூ. 30 கோடி செலவில் 197 திருத்தேர் கொட்டகைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதில் 104 திருத்தேர் கொட்டகைகள் நிறைவு பெற்றுள்ளன. ரூ. 31 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தங்கத் தேர்களும், ரூ. 29.44 கோடி செலவில் 9 புதிய வெள்ளித் தேர்கள் உருவாக்கும் பணிகளில் பெரிய பாளையம் திருக்கோயில் தங்கத்தேர் மற்றும் திருத்தணி, சென்னை காளிகாம்பாள் திருக்கோயில் வெள்ளித் தேர்கள் நிறைவு பெற்று பக்தர்கள் பயன்பாட்டில் உள்ளன. பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த மரத்தேர்கள், தங்கத்தேர்கள் மற்றும் வெள்ளித் தேர்களை மீண்டும் ஓட்டிக்காட்டிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும்.

அன்னதானத் திட்டத்தை பொறுத்தளவில் 13 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 564 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு ரூ. 120 கோடி செலவில் செயல்படுத்தப்படும் அன்னதான திட்டத்தினால் 3.5 கோடி பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர். இவ்வாறு இறையன்பர்களின் தேவையை செயல்பட்டு வரும் திராவிட மாடல் ஆட்சிக்கு 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலிலும் ஆதரவை நல்குவார்கள். விரைவு தரிசனம் மற்றும் இடைநிறுத்த தரிசனத்தை முதலில் திருவண்ணாமலை திருக்கோயிலில் தொடங்கிட உள்ளோம். அதனைத் தொடர்ந்து திருச்செந்தூரில் செயல்படுத்தப்படும். பஞ்சலிங்கங்களை தரிசனம் செய்வது தொடர்பாக சாதக, பாதகங்களை ஆராய்ந்து நீதிமன்றத்தில் எடுத்துக்கூறி, நீதிமன்றம் அளிக்கும் இறுதி தீர்ப்பின் படி வழி நடப்போம். குலசை தசரா திருவிழாவிற்கு தேவையான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, திருக்கோயில் தக்கார் ஆர். அருள்முருகன், திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் ஞானசேகரன், உள்ளாட்சி கலந்து கொண்டனர்.

# தூய்மை பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியினை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மை பணியாளர் லாரா

## மேயர் ஆர்.பிரியா ரூ10ஆயிரம் வழங்கி பாராட்டு



**சென்னை,செப்.06**

சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் (மண்டலம்-13), இ.சி.ஆர் பிரதான சாலையில், மருதீஸ்வரர் கோவில் எதிரே, நேற்று (04.09.2025) தூய்மைப் பணியின் போது தங்கச் சங்கிலியை கண்டெடுத்த கிளாரா அதனை உடனடியாக திருவான்மியூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.இதனையறிந்த முதலமைச்சர் தூய்மைப் பணியாளர் கிளாராவின் நேர்மையான இச்செயலினைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார். மேலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் தூய்மைப் பணியாளர் கிளாராவை தனது முகாம் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து, வெகுமதி வழங்கிப் பாராட்டினார்.தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி (05.09.2025) மேயர் ஆர். பிரியா, நேர்மையாகச் செயல்பட்ட தூய்மைப் பணியாளர் கிளாரா அவர்களை, ரிப்பன் கட்டடத்தில் உள்ள மேயர் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து சால்வை அணிவித்து, மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார்.இந்நிகழ்வின் போது, மாநகராட்சி ஆணையர்ஜெ. குமரகுருபரன், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், மற்றும் திடக்கழிவு மேலாண்மை கண்காணிப்புப் பொறியாளர்/எஸ். முருகன், செயற்பொறியாளர் ப. விஜய் அரவிந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

# எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் அரசுத்துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.9.5 லட்சம் மோசடி வழக்கில் ஒருவர் கைது

**சென்னை செப் 06-**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, தேசூர் பகுதியைச் சேர்ந்த சக்ரவர்த்தி, என்பவர் பி.இ எலக்ட்ரிக்கல் என்ஜினியரிங் படித்து முடித்துள்ளார். கடந்த 2020ம் ஆண்டு சக்ரவர்த்தியின் நண்பர் மூலம் அறிமுகமான இராமாபுரம் பகுதியைச்சேர்ந்த அஞ்சுகம் என்பவர், மேற்படி சக்கரவர்த்தியிடம் அரசுத்துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி 6 தவணைகளாக ரூ.9.5 லட்சம் பணம் பெற்றுள்ளார். ஆனால் பேசியபடி வேலை வாங்கித்தராமலும், பணத்தை திரும்ப தராமலும் அஞ்சுகம் ஏமாற்றி வந்துள்ளார். இது குறித்து சக்ரவர்த்தி காவல் ஆணையாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரில் எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்ததின்பேரில், ரூ.9.5 லட்சம் பணத்தை பெற்று மோசடி செய்த எதிரி அஞ்சுகம், என்பவரை கைது செய்தனர். மேலும் விசாரணையில் அஞ்சுகம், இராமாபுரம் பகுதியில் ஜெராக்ஸ் கடை நடத்தி வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அஞ்சுகம் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைகப்பட்டனர்.

# ஆவடி அருகே பரபரப்பு; துணை நடிகை தூக்கிட்டு தற்கொலை

**சென்னை செப் 06-**

ஆவடி அருகே துணை நடிகை தூக்கிட்டு தற்கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். ஆவடி அடுத்த கோவில்பதாகை கலைஞர்நகர் 1வது குறுக்குத்தெருவை சேர்ந்தவர் அசோக்குமார் (55). தனியார் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கு 2 மகள்கள் உள்ளனர். மூத்த மகள் திருமணமாகி ஆவடி வீராபுரம் பகுதியில் தனியாக வசித்து வருகிறார். இளைய மகள் ரூபகலா (31) துணை நடிகையாக இருந்து வந்தார். சினிமா மற்றும் சின்ன திரையில் நடித்துள்ளார். இவருக்கு நீண்ட நாட்களாக திருமணமாகாமல் இருந்ததால் மன உளைச்சலில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.இந்நிலையில், புதன்கிழமை அன்று இரவு வழக்கம்போல் தூங்குவதற்காக ரூபகலா படுக்கையறைக்கு சென்றுள்ளார். நீண்ட நேரமாக வெளியில் வராததால் சந்தேகமடைந்த அசோக்குமார், படுக்கையறைக்கு சென்று பார்த்தபோது ரூபகலா மின்விசிறி கொக்கியில் தூக்கில் தொங்குவதை பார்த்து அதிர்ச்சியடைந்து கதறி அழுதார்.

**தற்கொலை**

இதுகுறித்து ஆவடி டேங்க் பேக்டரி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி சம்பவ இடத்திற்கு வந்து போலீசார் பார்த்தபோது ரூபகலா பிணமாக தொங்கியது தெரியவந்தது. பின்னர், அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து குடும்ப பிரச்னையில் தற்கொலை செய்தாரா? அல்லது வேறு காரணமா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். துணை நடிக்கை தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஆவடி அருகே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



மதுரவாயல் தெற்கு 155 வது வார்டு ராமாபுரம் திருமலை நகர் நாகத்தம்மன் திருக்கோயில் ஜீர்ணோத்தரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். உடன் பகுதி செயலாளர் க.தாமோதரன், வட்ட செயலாளர்கள் எம்.பி.தென்றல்குமார்,ராஜ்குமார்பச்சையப்பன், மீனாட்சிசுந்தரம், காரம்பாக்கம் மகேஷ்,மற்றும் ஏ.எஸ்.பிரியா,வனிதா,சத்தியபிரியாமகேஷ் ,ஆர்.எம்.தமிழரசி, ஆனந்தி உள்ளனர்.

# சென்னை சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களில் ரூ.1,62 கோடி மீட்பு: காவல் துறையினருக்கு பொதுமக்கள் நன்றி

**சென்னை செப் 06-**

சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்கள் மூலமாக பல்வேறு சைபர் குற்ற நிகழ்வுகளில் பாதிக்கப்படும் பொதுமக்களின் புகார்களை 1930 என்ற அவசர அழைப்பு மூலமாக அல்லது நேரடியாக வழங்கப்படும் புகார்களை பெற்று துரிதமாக நவீன தொழிற்நுட்பத்துடன் கூடிய விசாரணை மூலம் பணம் இழந்தவர்களுக்கு உடனடியாக அவர்களின் பணத்தை மீட்டு தர சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் மத்திய குற்றப்பிரிவு மற்றும் கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு மண்டலங்களின் இணை ஆணையர்கள் மேற்பார்வையில் செயல்பட்டு வரும் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர்கள் மூலம் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சைபர் கிரைம் புகார் சார்ந்த வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டும், இணைய வழி மூலமாக பல்வேறு சமூக வலைதள பதிவு மற்றும் தரவுகள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சைபர் குற்றவாளிகளின் உரிய தொடர்புகளை கண்டறிந்து வங்கி கணக்குகள் முடக்கப்பட்டு, இழந்த பணத்தொகையை மீள இழந்தவர்கள் வங்கி கணக்கில் மீட்டு வழங்குவதிலும், இழந்தவர்களுடைய பணத்தை மற்றொரு வங்கி கணக்கில் அனுப்ப கோரி சிலர் ஏமாற்றப்பட்டிருப்பதும், வழக்கு சார்ந்து வங்கி கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டு உரிய நீதிமன்ற நடவடிக்கை மூலம் மீள பெற்று தருவதிலும் சென்னை பெருநகர காவல் துறை முன்னிலை வகிக்கிறது.

சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களில் அதிகாரிகள் திறம்பட துரிதமாக விசாரணை மேற்கொண்டு கடந்த ஆகஸ்ட் மாதம் 1 ந் தேதி முதல் 31 ந் தேதி வரை) சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் காவல் நிலையத்தில் தாக்கலான 38 புகார் மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு ரூ.73,44,771/- மீட்கப்பட்டும், வடக்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலையத்தில் பெறப்பட்ட 13 புகார் மனுக்களில் ரூ.31,50,584/- மீட்கப்பட்டும், மேற்கு மண்டலத்தில் பெறப்பட்ட 34 புகார் மனுக்களில் ரூ.11,68,772/- மீட்கப்பட்டும், தெற்கு மண்டலத்தில் பெறப்பட்ட 40 புகார் மனுக்களில் ரூ.23,81,191/- மீட்கப்பட்டும், கிழக்கு மண்டலத்தில் பெறப்பட்ட 43 மனுக்களில் ரூ.22,08,149/-மீட்கப்பட்டும் மொத்தமாக 168 புகார்தாரர்களின் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மொத்தம் பணம் ரூ. 1,62,53,467/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து நானூற்று அறுபத்து ஏழு மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு 2025ம் ஆண்டு 31.08.2025 வரை ரூ.20,41,89,113/- மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இழந்த பணத்தை திரும்ப பெற்ற பொதுமக்கள் சென்னை பெருநகர காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்தனர்.

பொதுமக்கள் இணைய வழி பண பரிமாற்றம் செய்யும்பொழுது மிகுந்த விழிப்புணர்வுடனும், அனுப்பும் தொடர்புகளில் உரிய நம்பகத்தன்மை அறிந்து பயன்படுத்திடவும், உரிய புகார்களுக்கு 1930 எண்ணை தொடர்பு கொள்ளவும், www.cybercrime.gov.in என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும் சென்னை பெருநகர காவல் துறை மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.

# சென்னையில் நல் ஆசிரியர் விருது: முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு வழங்கினார்

**சென்னை செப் 06-**

லயன்ஸ் கிளப் ஆப் மீனம்பாக்கம் மற்றும் மிஷன் குரு தேவா பவா ஆகிய இரு அமைப்புகளும் ஒருங்கிணைந்து கோபாலபுரத்திலுள்ள டி.ஏ.வி. மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வித்யா சவா சம்மான் விருதுகள் 2025 நிகழ்வை முதன் முறையாக நடத்தின. மிக சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில், பள்ளி மாணவர்களின் வாழ்க்கையிலும் மற்றும் கல்வி சூழலமைப்பிலும் நீடித்து நிலைக்கும் தாக்கத்தை செய்திருக்கும் 20 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு மாநில அரசின் முன்னாள் தலைமைச் செயலர் டாக்டர். இறை அன்பு இவ்விழாவில் கலந்து கொண்டு சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினார். மேலும் "நாட்டின் வளர்ச்சி கட்டமைப்பில் ஆசிரியரின் பங்கு என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். கற்பித்தலில் உள்ள பெருமையை மேம்படுத்துகிற மற்றும் ஆசிரியர்களை கவுரவித்து பெருமைப்படுத்துகிற" இந்த விருதுகள் திட்டத்தை செயல்படுத்தியதை அவர் மனமார பாராட்டினார்.பிரபல கல்வியாளரான வித்யா ஷங்கர் சக்ரவர்த்தி, "மகிழ்ச்சியான ஆசிரியர்கள், மகிழ்ச்சியான வகுப்பறைகள்" என்ற தலைப்பில் ஒரு அமர்வை மிகச்சிறப்பாக நடத்தினார். இவ்விழாவில் உரையாற்றிய டி.ஏ.வி. பள்ளிகள் குழுமத்தின் இயக்குநர் திருமதி. சாந்தி அசோகன், விருதுகள் வழங்கப்பட்ட சிறந்த ஆசிரியர்களை பாராட்டி கவுரவித்தார். மாணாக்கர்களுக்கும், பள்ளிகளுக்கும் மற்றும் கல்வி சூழலமைப்பிற்கும் மிக நேர்த்தியான பங்களிப்பின் மூலம் மேம்பாட்டை சாத்தியமாக்கியதற்காக பள்ளி தாளாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களால் விருதுக்கான சிறந்த ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

விருது பெற்ற ஒவ்வொரு ஆசிரியருக்கும் பாராட்டு சான்றிதழும், ரூ.21,ஆயிரம் ரொக்கப் பரிசும் இவ்விழாவில் வழங்கப்பட்டன.அதிக ஊதியம் வழங்கும் கார்ப்பரேட் நிறுவனங்களில் பணியாற்றி அப்பணிகளை துறந்து பள்ளிகளில் கல்விப் பணி ஆற்ற தன்னை அர்ப்பணித்திருக்கும் ஆசிரியர்களை குறித்த ஒரு சிறிய ஆவணப்படம் இந்நிகழ்வின் போது வெளியிடப்பட்டது. கல்விப் பணி மீது ஆர்வத்தால் சுயநலமற்ற சேவையாற்ற வேண்டுமென்ற அவர்களது அர்ப்பணிப்பு உணர்வை இந்த குறும்படம் நேர்த்தியாக சித்தரித்தது. மிஷன் குரு தேவா பவா அமைப்பின் இணை நிறுவனர் லயன்ஸ். சி.ஏ. அனில் கிச்சா பேசுகையில், "ஒரு ஆசிரியரே சமுதாயத்தை வடிவமைத்து அதன் தொடர்ச்சியாக தேசத்தை கட்டமைக்கிறார்" என்று குறிப்பிட்டார்.லயன்ஸ் கிளப் ஆப் மீனம்பாக்கம்-ன் தலைவர் ஏ. பாலாஜி கூறியதாவது: வித்யா சேவா சம்மான் விருதின் மூலம், உண்மையான ஹீரோக்களான நமது ஆசிரியர்களை நாங்கள் கவுரவித்து போற்றுகிறோம் என்றார்.

# குடிமைபணிகள் தேர்வில் வெற்றிபெற்று துணை காவல் கண்காணிப்பாளராக பணி நியமன ஆணை பெற்ற ஆய்வாளர் எஸ்.ராமலிங்கம்

## ஆணையர் நேரில் அழைத்து பாராட்டு

**சென்னை செப் 06-**

சென்னை பெருநகர காவல், நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிந்து வரும் காவல் ஆய்வாளர் எஸ்.ராமலிங்கம், 2011 ஆம் ஆண்டு நேரடி காவல் உதவி ஆய்வாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டம், சென்னை அம்பத்தூர், மத்தியகுற்றப்பிரிவு, நவீன காவல் கட்டுப்பாட்டு அறை பிரிவுகளில் பணிபுரிந்து 2025ம் ஆண்டு காவல் ஆய்வாளராக பதவி உயர் பெற்றார். காவல் ஆய்வாளர் துறை அனுமதியுடன் கடந்த 2024ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வில் கலந்து கொண்டு, தேர்வில் வெற்றி பெற்று 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் துணை காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு தேர்வு பெற்று பணிநியமன ஆணை பெற்றுள்ளார்.



காவல் துறையில் சிறப்பாக பணிபுரிந்து கொண்டு, தொடர்ச்சியாக ஊக்கத்துடன் பல்வேறு உயர் பதவிகளுக்கான அரசு தேர்வுகளில் பல முறை கலந்து கொண்டு, தேர்ச்சி பெற்றும் இறுதியாக காவல் துறையில் துணை காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமன ஆணை பெற்று, வருகிற 7.09.2025 முதல் பணிப்பயிற்சிக்கு அறிக்கை செய்ய உள்ள காவல் ஆய்வாளர் எஸ்.ராமலிங்கம் சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் நுண்ணறிவுப்பிரிவு துணை ஆணையர் எம்.ராமமூர்த்தி உடனிருந்தார்.

# கூலி தொழிலாளியிடம் செல்போன் திருடியவர் கைது

**சென்னை செப் 06-**

அரியலூர் மாவட்டம், கிழநத்தம் பகுதியைச்சேர்ந்த ராகுல், என்பவர் கோயம்பேடு மார்க்கெட்டில் மூட்டை தூக்கும் கூலி வேலை செய்து வருகிறார். ராகுல் நேற்று முன் தினம் அதிகாலை கோயம்பேடு பேருந்து நிலையம், மெயின் ஹாலில் படுத்து தூங்கி விட்டு சிறிது நேரம் கழித்து எழுந்து பார்த்த போது, அவர் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த செல்போனை யாரோ திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து ராகுல் கோயம்பேடு சி.எம்.பி.டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கோயம்பேடு சி.எம்.பி.டி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செல்போன் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட ராஜேந்திர போஸ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் மீட்கப்பட்டது. விசாரணையில் எதிரி ராஜேந்திரபோஸ் மீது ஏற்கனவே 9 வழக்குகள் உள்ளது தெரியவந்தது. எதிரி ராஜேந்திரபோஸ் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# வளசரவாக்கம் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 3 பேர் கைது

**சென்னை செப் 06-**

வளசரவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், காவல் குழுவினர் நேற்று முன் தினம் வளசரவாக்கம், லாமெக் தெரு பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு வீட்டை கண்காணித்தபோது, அங்கு சிலர் பணம் வைத்து சீட்டுக்கட்டுகளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில் மேற்படி இடத்தில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 1.சுப்பிரமணி, 2.பஞ்சவர்ணம், 3.கண்ணியப்பன், ஆகிய 3 பேரை கைது செய்தனர். சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பணம் ரூ.1,000/- மற்றும் 4 சீட்டு கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

# கடலூர் புனித டேவிட் கோட்டையில் புணரமைப்பு

## கலெக்டர் சி.பி.ஆதித்யாசெந்தில்குமார் ஆய்வு



**கடலூர் செப் 06-**

கடலூர் தேவனாம்பட்டிணம் புனித டேவிட் கோட்டையில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் (05.09.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது, கடலூர் தேவணாம்பட்டினம் அருகே ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் புனித டேவிட் கோட்டை கட்டபட்டுள்ளது. சுமார் 200 ஆண்டுகளை கடந்த பழமைவாய்ந்த கட்டடமாக அடையாளப்படுத்த ஒரு புராதான சின்னமாக விளங்குகிறது. இக்கட்டடம் தற்போது தேவாலயத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது கட்டடத்தின் பல்வேறு பகுதிகள் சேதமடைந்துள்ளதால் புனரமைப்பதற்காக தேவாலயத்திடம் அனுமதி பெற்றுள்ளது. கடலூர் மாவட்டத்தில் பழமைவாய்ந்த வரலாற்றுத் தொன்மையான கட்டடங்களை பராமரித்து பாதுகாத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் தற்போது பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், டவுன்ஹால் அரங்கம் புனரமைக்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து 17ஆம் நூற்றாண்டை சேர்ந்த புனித டேவிட் கோட்டை புனரமைக்க வேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றள்ளன. அதனடிப்படையில் இக்கோட்டை இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கோட்டை பயன்படுத்தப்பட்டு சுமார் 120 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் பல்வேறு நிலைகளில் சேதம் மற்றும் பழுதடைந்துள்ளது. இக்கட்டடத்தினை புனரமைத்து புதுப்பித்திட அரசிற்கு முன்மொழிவு அனுப்பப்படவுள்ளது. அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் பழமையான இக்கட்டடமானது அதன் தன்மை மாறாமல் புதுப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் வரலாற்று தொன்மையினை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், சுற்றுலா தளமாகவும் உருவாக்குவதன் மூலம் உள்ளூர் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்புடன் பொருளாதார வாய்ப்புகளும் கிடைக்கும் எனமாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார். ஆய்வின் போது தொல்லியல் துறை செயற்பொறியாளர் தேவேந்திரன், கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தர்ராஜன், கடலூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் அகஸ்டியன் பிரபாகரன், பிரவின்குமார், உதவி செயற்பொறியாளர் காவியநாதன், பேராயர் பீட்டர் பால்தாமஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடலூர் தொழிற்சாலைவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறிய அமைச்சர் பன்னீர்செல்வம்



**கடலூர் செப் 06-**

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் , மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் முன்னிலையில் கடலூர் சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் கிரிம்ஸன் ஆர்கானிக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் ஏற்பட்ட விபத்தினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் பொதுமக்களை இன்று (05.09.2025) சந்தித்து ஆறுதல் கூறினார். வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவிக்கையில், கடலூர் சிப்காட் வாகத்தில் இயங்கி வரும் கிரிம்ஸன் தனியார் இரசாயண தொழிற்சாலையில் இரசாயனம் செல்லும் வழியில் இருந்த கேஸ்கட் வெடித்து திடீரென ரசாயண புகை மண்டலம் பரவியதால், நிறுவனத்திற்கு அருகில் உள்ள குடிகாடு கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சு திணறல் மற்றும் இருமல் ஏற்பட்டுள்ளது விபத்து ஏற்பட்டது.

இதன் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்ட90க்கும் மேற்பட்டோர் கடலூர் மற்றும் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.. கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் 12 ஆண்கள் 64 பெண்கள் 5 குழந்தைகள் என 81 நபர்களும், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு ஆண், 11 பெண்கள் என 12 நபர்களும் ஆக மொத்தம் 93 நபர்கள் மூச்சுத் திணறல் காரணமாக அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து குறித்து துறை அலுவலர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்படும். இது போன்ற விபத்துக்கள் தொடர்ந்து நடைபெறாத வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுத்தப்பட்டுள்ளது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுபவர்களுக்கு சிறப்பு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் கடலூர் மாநகர மேயர் சுந்தரிராஜா, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தர்ராஜன், மருத்துவமனை கண்காணிப்பாளர், மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராணிப்பேட்டையில் முதன்முறையாக தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி ஏற்பாடு குறித்து கலந்தாய்வு

## கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா தலைமையில் நடைபெற்றது




**ராணிப்பேட்டை செப் 06-**

மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களின் சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் முதன் முதலாவதாக தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி (Industrial Expo) நடத்துவது தொடர்பாக சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் முதன்முதலாவதாக தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி (Industrial Expo) நடத்திட முடிவுசெய்யப்பட்டுள்ளது. இராணிப்பேட்டை மாவட்டத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற் நிறுவனங்கள், பெரிய தொழிற்நிறுவனங்கள் இக்கண்காட்சியில் கலந்து கொள்ளலாம். மேலும், அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிற்நிறுவனங்கள் மற்றும் அண்டை மாநிலத்திலுள்ள தொழிற்நிறுவனங்களும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படும். நிறுவனங்களுக்கிடையே தொழில் வியாபாரம்குறித்த பேச்சு வார்த்தை நடத்தப்படும். 120க்கும் மேற்பட்ட அரங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் அக்டோபர் 2025 கடைசி வாரத்தில், சிப்காட் தொழிற்பேட்டை பகுதியிலுள்ள இடத்தில் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே இக்கூட்டத்திற்கு வருகைபுரிந்துள்ள தொழிற் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் இக்கண்காட்சியை சிறப்பாக நடத்திட ஆலோசனைகள் வழங்க வேண்டும். மேலும், கலந்து கொள்ள முன்பதிவுகளையும் தொடங்கிட வேண்டுமென கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா தெரிவித்தார்கள். தொடர்ந்து, இக்கூட்டத்தில் தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி நடைபெற உள்ள இடம், தேதி மற்றும் தேவையான ஏற்பாடுகள் குறித்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் .ஆனந்தன், சிறு குறு தொழில்கள் சங்க தலைவர் புனிதவேல், பொதுச்செயலாளர்முரளி, தொழிலக பாதுகாப்பு மற்றும் நலத்துறை துணை/இணைஇயக்குநர்கள், தீயணைப்புத் துறை அலுவலர், மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவன உரிமையாளர்கள் பங்கேற்றனர்

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# பட்டாசு கடைக்கு விருப்பமுள்ளோர் அக்டோபர் 5க்குள் விண்ணப்பிக்கலாம்

## கலெக்டர் சி.பி.ஆதித்யாசெந்தில்குமார் அறிவிப்பு

**கடலூர் செப் 06-**

எதிர்வரும் 20.10.2025 அன்று கொண்டாடப்பட உள்ள தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வெடிபொருள் சட்டம்-1884 மற்றும் வெடிபொருள் சட்ட விதிகள் 2008-இன் கீழ் கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட கடலூர், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோயில், ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம், திட்டக்குடி மற்றும் வேப்பூர் ஆகிய வட்டங்களில், தற்காலிக பட்டாசுக் கடைகள் (Temporary Crackers shops) வைக்க விரும்புவோர் விதி எண்.84-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இணையதளம் (Online) வழியாக 05.10.2025 அன்றுக்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேற்படி விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக (https://www.tnesevai.tn.gov.in) அரசு இ-சேவை மையங்களில், உரிய ஆவணங்களுடன் உரிமக் கட்டணம் ரூ.600/- செலுத்தி பதிவேற்றம் செய்யலாம். மேற்கண்ட விண் ண ப் ப ங் களை -05.10.2025 அன்றுக்குள் இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேற்படி விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதெனில், அதற்கான தற்காலிக உரிம ஆணையையும் (Temporary Crackers Licence), நிராகரிக்கப்பட்டதெனில் அதற்கான காரணத்தையும் இணையதளம் வாயிலாகவே மனுதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.மேலும், அனுமதியின்றி, உரிமம் பெறாமல் பட்டாசு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நேர்வில், தற்காலிக பட்டாசுக்கடை அமைக்க, உரிமம் கோரி விண்ணப்பம் அளிப்போர், பொதுமக்களுக்கு சிரமம் இல்லாத ஆட்சேபணையற்ற மற்றும் பாதுகாப்பான இடத்தை தேர்வு செய்து விண்ணப்பிக்குமாறும், விபத்தில்லாத மகிழ்ச்சியான தீபாவளிப் பண்டிகையை கொண்டாடிட ஒத்துழைப்பு தருமாறு தெரிவித்துள்ளார்.



புதுச்சேரியில் ஓணம் பண்டிகையையொட்டி கேரள சமாஜம் முன்னாள் தலைவர் ஜோஷி சங்கர் தனது குடும்பத்துடன் அத்தப்பூ கோலம் போட்டு பந்தளராஜனை வரவேற்று பண்டிகையை கொண்டாடினார்.

# பராமரிப்பு பணிகள் காரணமாக அரக்கோணத்தில் இன்று மின் நிறுத்தம்

**அரக்கோணம் செப் 06**

வேலூர் மின்பகிர்மான வட்டம் மோசூர் மற்றும் அரக்கோணம் துணை மின் நிலையத்தில் மின்சாதன பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் 06.09.2025 சனிக்கிழமை அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 வரை கீழ்க்கண்ட பகுதிகளுக்கு மின்விநியோகம் நிறுத்தப்படும் பகுதிகள் காவனூர், ஆணைப்பாக்கம், அம்பரிஷாபுரம்,புளியமங்களம், செய்யூர் கீழ்க்குப்பம், நகரிகுப்பம், மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அரக்கோணம் நகரம், அவுசிங்போட், அசோக் நகர், அரக்கோணம் பழைய பஜார், மோசூர் ரோடு, காந்தி ரோடு, சோளிங்கர் ரோடு, மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்வின்டர்பேட்டை, நாகவேடு, ஆத்தூர், அம்மனூர், மேல்பாக்கம், நேவல் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் அடங்கும் என செயற்பொறியாளர் சரவணன் அறிவித்து உள்ளார்.



புதுச்சேரி அரசு செய்தி மற்றும் விளம்பரத்துறை சார்பில் அன்னை தெரேசா நினைவு நாளை ஒட்டி அன்னாரின் திரு உருவ சிலைக்கு அமைச்சர் லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் ராஜவேலு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ கே டி ஆறுமுகம், தக்ஷிணாமூர்த்தி, லட்சுமி காந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

# ராணிப்பேட்டை மாவட்டத்தில் அரசுப்பணியாளர்களுக்கான ஆட்சிமொழிப் பயிலரங்கம்

## மாவட்ட வருவாய் அலுவலர் செ.தனலிங்கம் தலைமையில் நடந்தது



**ராணிப்பேட்டை செப் 06-**

ராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலுவலர் செ. தனலிங்கம் தலைமையில், அனைத்துத்துறை அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது. அனைத்து அரசுப் பணியாளர்களும், பெயரின் முன்னெழுத்தும், சுருக்கொப்பமும், முழு ஒப்பமும் தமிழில் இடுதல் வேண்டும் என்றும், அரசு அலுவலங்களில் உள்ள கோப்புகள் மற்றும் பதிவேடுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும் என்றும், மாவட்ட வருவாய் அலுவலர் செ. தனலிங்கம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்ற அனைத்துத்துறை அரசுப் பணியாளர்களுக்கான ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கத்தில் பங்கேற்ற அரசுப் பணியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கி தெரிவித்தார். அனைத்து அரசுப் பணியாளர்களும் பெயரின் முன்னெழுத்தும், சுருக்கொப்பமும், முழு ஒப்பமும் தமிழில் இடுதல் வேண்டும். கோப்புகள் மற்றும் பதிவேடுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும். நீதிமன்றம், ஆணையம் போன்ற ஒருசில தவிர்க்க முடியாத கடிதங்களைத் தவிர, மற்ற அனைத்து கடிதங்களும் தமிழில் எழுதப்பட வேண்டும். இந்தப் பயிற்சி வகுப்பினை பணியாளர்கள் அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்தார். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் விரைவாகவும், முழுமையாகவும் நடைபெற துணைபுரியும் வகையில், மாவட்டங்களில் செயற்பட்டுவரும் அனைத்துத்துறை அரசு அலுவலகங்களில் பணியாற்றிவரும் அரசுப் பணியாளர்களுக்கு, ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் ஆண்டுதோறும் இராணிப்பேட்டை மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஒளவை அருள் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் (பொ) . ஜெயஜோதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உத வி யா ளர் ஏகா ம் ப ரம் (பொ), செய்தி மக்கள் தொடர்பு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம், திருச்சி -1**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.26/ க.பொ/ கட்டட (க & ப) வட்டம் / 2025-2026/ திருச்சி-1 / நாள் : 04.09.2025**

**முன்தகுதி விண்ணப்பம் மற்றும் விரிவான இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (இரு உறை முறை)**
**ஒப்பந்த வகை: ஒட்டு மொத்தம்**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) | முன்வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் சமூக நீதி விடுதி (கல்லூரி மாணவர்) கட்டும் பணி. | ரூ.583.00 | ரூ 3,02,000/- | 10 மாதங்கள் | வகுப்பு II மற்றும் அதற்கு மேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 15.09.2025 முதல் 15.10.2025 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 15.10.2025 மாலை 03.00 மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்;றும் நேரம் : 16.10.2025 மாலை 3.30 மணி முதல்.
5. மேலும் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.
6. தள ஆய்வு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் 4 (நான்கு) நாட்களுக்கு முன்னர் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அவர்களை சென்றடைய வேண்டும்.
7. தள ஆய்வு சான்றிதழ் பெற சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அல்லது இணை அதிகாரிகளுடன் சென்று தள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. தள ஆய்வு சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் கடைசி தேதிக்கு ஒரு நாள் முன்பு வரை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**செ.ம.தொ.இ /4920/ ஒப்பந்தப்புள்ளி /2025**

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது**
**கட்டட (க & ப) வட்டம், திருச்சி -1**

# தமிழ்நாடு மாநில சுற்றுலா விருதுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## கலெக்டர் சி.பி.ஆதித்யாசெந்தில்குமார் தகவல்

**கடலூர் செப் 06-**

சுற்றுலாத்துறை அமைச்சர் 2021-22ஆம் ஆண்டு சட்டசபை கூட்டத்தொடரில் அறிவித்துள்ளதற்கினங்க, சுற்றுலாத் துறையின் சார்பில் நான்காவது தமிழ்நாடு மாநில சுற்றுலா விருதுகள் விழா-2025 முன்னிட்டு பல்வேறு சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது. மேலும், மாநிலத்தில் சுற்றுலா தொடர்பான செயல்பாடுகளில் சிறப்பாக செயல்படும் சுற்றுலா தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக 45 விருதுகள் 17 வெவ்வேறு பிரிவுகளில் வழங்கப்படும் எனவும், www.tntourismawards.com என்ற இணையதளத்தில் விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்து 15.09.2025 அன்றுக்குள் விண்ணப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்களுக்கு முகவரி, மாவட்ட சுற்றுலா அலுவலர், மாவட்ட சுற்றுலா அலுவலகம், ரயில்வே பீடர்ஸ் ரோடு, சிதம்பரம் என்ற முகவரியினை தொடர்பு கொள்ளலாம்.

மேலும், touristofficecdm@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மற்றும் 04144 238739, 8939896399 என்ற தொலைப்பேசி எண்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**கனம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், விழுப்புரம்.**
**மனு எண். 1003 / 2025**

வீரப்பன், த/பெ. மாரிமுத்து,
மேட்டுத் தெரு, டி. புதுப்பாளையம்,
திருவெண்ணெய்நல்லூர்,
விழுப்புரம் மாவட்டம். ..... மனுதாரர்

எதிராக

1) வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம்.
2) பிறப்பு இறப்பு அலுவலர் அவர்கள், விழுப்புரம். .... எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் ஆகிய எனது தந்தை திரு. மாரிமுத்து, த/பெ. முத்து என்பவர் கடந்த 22-09-2017 ஆம் தேதி அன்று விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர், டி. புதுப்பாளையம், மேட்டுத் தெரு என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. எனவே எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய அலுவலகத்தில் உத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபனை இருந்தால் இந்த விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபனைகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாருக்கு ஆதரவாக ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

// கோர்ட்டார் உத்தரவுபடி //

வீரப்பன், த/பெ. மாரிமுத்து,
மேட்டுத் தெரு, டி. புதுப்பாளையம்,
திருவெண்ணெய்நல்லூர்,
விழுப்புரம் மாவட்டம்.

**BEFORE THE HON'BLE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL**
**II ADDITIONAL DISTRICT JUDGE AT PUDUCHERRY**
**M.A.C.T.O.P No. 240 /2023**

1. Suseela
2. Bhuvneswari
3. Srinivasan

......... Petitioners

Vs.

1. Vetrivel @ Sathishkumar
2. Pavithradevi B

.............. Respondents

To – Respondent No. 1
Vetrivel Alias Sathishkumar
Son of Kuppusamy
No. 145, Muthaya Mudaliar Street,
Muthialpet, Pondicherry 03

**Notice to First Respondent**

Please take notice that the above-named Claim Petitioners have filed the accompanying Claim Application seeking compensation in respect of the fatal accident that occurred on 14.10.2022, and the said matter stands posted for hearing on 17.09.2025 at 10:00 A.M. before the Hon'ble Court mentioned above. You are hereby directed to appear in person or through duly engaged legal counsel on the said date and time, and to file your objections, if any, in response to the Claim Application. Failing which the Petition will be decided on merits.

R.SIVA,
ADVOCATE,
PUDUCHERRY.

**புதுச்சேரி இரண்டாவது கூடுதல் உரிமையியல் மாவட்ட நீதிமன்றம்**
**OS. 886/2025**

1. மயிலி
க/பெ. காலஞ்சென்ற ரவி
2. ஷர்மிளா
த/பெ. காலஞ்சென்ற ரவி
3. கீர்த்தனா
த/பெ. காலஞ்சென்ற ரவி
நெ. 7 மாடி மிஷின் வீதி
புதுச்சேரி - 605001.

......வாதிகள்

எதிர்

தி. இளங்கோவன்

..... பிரதிவாதி

**பொது அறிவிப்பு**

வாதிகள், 13.02.2025 ல் காலமான திருக்காமு குமாரர் ரவி அவர்களின் வாரிசுதாரர்கள் எனகோரி தாக்கல் செய்துள்ள மேற்கண்ட வழக்கு 10.09.2025 காலை 10 மணிக்கு மேற்படி கோர்ட்டில் வைக்கப்பட்டுள்ளது வழக்கு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி கோர்ட்டில் ஆஜர் ஆகி தெரிவிக்க தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு வாதிகள் கோரியபடி தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

V. அல்குருபிரசாந்த்,
வழக்கறிஞர்,
புதுச்சேரி.

# இந்திய கிரிக்கெட் வாரிய தலைவராகிறார் சச்சின்.. ?

## விரைவில் அறிவிப்பு வெளியாகிறது

**மும்பை, செப். 06-**

இந்திய கிரிக்கெட் வாரிய சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.



**ரோஜர் பின்னி விலகல்...**

இந்திய கிரிக்கெட் வாரிய (பி.சி.சி.ஐ.) தலைவராக ரோஜர் பின்னி கடந்த இரண்டு ஆண்டுகளாக பதவி வகித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு சமீபத்தில் 70 வயது பூர்த்தியடைந்தது. பி.சி.சி.ஐ. விதிகளின்படி, 70 வயதைக் கடந்தவர்கள் நிர்வாகப் பதவிகளில் நீடிக்க முடியாது என்பதால், அவர் தனது பதவியிலிருந்து விலகினார்.

**புதிய தலைவர் தேர்வு...**

தொடர்ந்து, துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா தற்காலிக பி.சி.சி.ஐ. தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். புதிய தலைவரை தேர்வு செய்வதில் இந்திய கிரிக்கெட் வாரியம் ஆர்வம் காட்டி வருகிறது. இந்த நிலையில் பி.சி.சி.ஐ. புதிய தலைவராக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கர் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

**அதிகாரபூர்வ அறிவிப்பு...**

இங்கிலாந்தில் நடைபெற்ற ஆண்டர்சன்-தெண்டுல்கர் டிராபி டெஸ்ட் தொடரின்போது சச்சின் தெண்டுல்கருடன் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடந்துள்ளது. அதன்படி சச்சினும் இதற்கு ஒப்புக்கொண்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. சச்சின் நியமனம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது .

### முத்தரப்பு டி-20 கிரிக்கெட் தொடர்:

# பாக். இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்

**சார்ஜா, செப். 06-**

முத்தரப்பு டி-20 தொடரில் பாகிஸ்தான் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேற்றியுள்ளது.



**5-வது லீக் ஆட்டம்...**

ஐக்கிய அரபு அமீரகம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய 3 நாடுகள் இடையிலான டி20 ஓவர் கிரிக்கெட் தொடர் சார்ஜாவில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இதில் நடைபெற்ற 5-வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - யு.ஏ.இ. அணிகள் மோதின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக பகர் ஜமான் 77 ரன்கள் அடித்தார். யு.ஏ.இ. தரப்பில் ஹேய்டர் அலி தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**7 விக்கெட்டுகளை...**

இதனையடுத்து 172 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய யு.ஏ.இ. அணியால் பாகிஸ்தான் பந்துவீச்சை சமாளித்து ரன் குவிக்க முடியவில்லை. 20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய யு.ஏ.இ. அணி 7 விக்கெட்டுகளை இழந்து 140 ரன்கள் மட்டுமே அடித்தது. இதனால் 31 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. யு.ஏ.இ. தரப்பில் அதிகபட்சமாக அலிஷன் ஷரபு 68 ரன்கள் அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் அப்ரார் அகமது 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**யு.ஏ.இ. வெளியேற்றம்...**


இந்த தொடரின் இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் (3 வெற்றிகள்) மற்றும் ஆப்கானிஸ்தான் (2 வெற்றிகள்) அணிகள் தகுதி பெற்றுள்ளன. இறுதிப்போட்டி 7-ம் தேதி நடைபெற உள்ளது. இதுவரை ஒரு வெற்றி கூட பெறாத யு.ஏ.இ. அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்து வெளியேறியது. இன்று நடைபெற உள்ள கடைசி லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் - யு.ஏ.இ. அணிகள் மோதுகின்றன.

### ஒருநாள் கிரிக்கெட் போட்டியில்

# பிரீட்ஸ்கே புதிய உலக சாதனை

**லண்டன், செப். 06-**

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் தொடர்ந்து 5 ஆட்டங்களில் 50 ரன்களுக்கு மேல் எடுதத்து தென் ஆப்பிரிக்கா வீரர் பிரீட்ஸ்கே புதிய உலக சாதனை படைத்துள்ளார்.



**இங்கிலாந்தில்...**

பவுமா தலைமையிலான தென்ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. லீட்சில் நடந்த தொடக்க ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை பந்தாடியது. இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2-வது ஒரு நாள் போட்டி லண்டன் லார்ட்சில் நடைபெற்றது.

**மேத்யூ பிரீட்ஸ்கே...**

டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் பந்துவீச்சை செய்தார் அதன்படி தென் ஆப்பிரிக்கா அணி முதலில் பேட்டிங் செய்தது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணியின் கேப்டன் ஹாரி புரூக் பந்துவீச்சை செய்தார் அதன்படி தென் ஆப்பிரிக்கா அணி முதலில் பேட்டிங் செய்தது தொடக்கம் முதல் அதிரடியாக விளையாடிய தென் ஆப்பிரிக்கா அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்கு 330 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக மேத்யூ பிரீட்ஸ்கே 85 ரன்களும் (77 பந்து, 7 பவுண்டரி, 3 சிக்சர்), டிரிஸ்டான் ஸ்டப்ஸ் 58 ரன்களும், மார்க்ரம் 49 ரன்களும், பிரேவிஸ் 42 ரன்களும் விளாசினர். தொடர்ந்து 331 ரன்கள் இலக்குடன் விளையாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 325 ரன்கள் மட்டுமே எடுத்தது. தென் ஆப்பிரிக்கா அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**புதிய உலக சாதனை...**

இந்த நிலையில், இந்த போட்டியில் அரைசதம் அடித்ததால் தென் ஆப்பிரிக்கா வீரர் பிரீட்ஸ்கே புதிய சாதனை படைத்துள்ளார். 5 ஆட்டங்களிலும் அவர் 50 ரன்களுக்கு மேல் (150, 83, 57, 88 மற்றும் 85 ரன்) எடுத்துள்ளார். இதன் மூலம் ஒரு நாள் கிரிக்கெட்டில் முதல் 5 ஆட்டங்களிலும் அரைசதம் கடந்த முதல் வீரர் என்ற உலக சாதனையை படைத்தார். இதற்கு முன்பு இந்தியாவின் நவ்ஜோத் சித்து தனது முதல் 4 ஆட்டங்களில் 50 ரன்களுக்கு மேல் எடுத்ததே சாதனையாக இருந்தது. அவரது 36 ஆண்டு கால சாதனையை 26 வயதான பிரீட்ஸ்கே முறியடித்துள்ளார்.

# மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்: டிக்கெட் விற்பனை தேதி அறிவிப்பு

**புதுடெல்லி, செப். 06-**

மகளிர் உலகக் கோப்பை தொடரில் இந்தியாவில் நடைபெறும் லீக் ஆட்டங்களுக்கான டிக்கெட் விலையை ஐசிசி அறிவித்துள்ளது. முதல் கட்ட விற்பனையில் டிக்கெட்டின் விலை ரூ.100 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டிக்கெட் விற்பனை வரும் 9-ம் தேதி தொடங்க உள்ளது.



**மொத்தம் 8 அணிகள்...**

ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் வரும் 30-ம் தேதி இந்தியா மற்றும் இலங்கையில் தொடங்குகிறது. மொத்தம் 8 அணிகள் பங்கேற்கும் இந்த தொடருக்கான மொத்த பரிசுத் தொகை ரூ.122.50 கோடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.39.95 கோடி வழங்கப்பட உள்ளது.

**டிக்கெட் விலையை...**

இந்நிலையில், மகளிர் உலகக் கோப்பை தொடரில் இந்தியாவில் நடைபெறும் லீக் ஆட்டங்களுக்கான டிக்கெட் விலையை ஐசிசி அறிவித்துள்ளது. முதல் கட்ட விற்பனையில் டிக்கெட்டின் விலை ரூ.100 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டிக்கெட் விற்பனை வரும் 9-ம் தேதி தொடங்க உள்ளது. அன்றைய தினமே டிக்கெட்களை பெற விரும்பும் ரசிகர்கள் பதிவுசெய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் தொடக்க விழாவை பிரமாண்டமாக நடத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மரம்
மனிதனின்
உரம்

## இறுதிக்கு அமன்டா முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2-வது அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் அமன்டா அனிசிமோவா, ஜப்பானின் நவோமி ஒசாகா உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை ஒசாகா கைப்பற்றிய நிலையில், அடுத்த 2 செட்டுகளை அனிசிமோவா கைப்பற்றி வெற்றி பெற்றார். அனிசிமோவா இந்த ஆட்டத்தில் 6-7, 7-6 மற்றும் 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.இறுதிப்போட்டியில் சபலென்கா - அனிசிமோவா பலப்பரீட்சை நடத்த உள்ளனர்.

## இந்தியா-ஆப்கான் ஆட்டம் டிரா

மத்திய ஆசிய கால்பந்து கூட்டமைப்பு சார்பில் நேஷன்ஸ் கோப்பை கால்பந்து போட்டி தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தானில் நடந்து வருகிறது. ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெற்றுள்ள அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தை பெறும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

இதில் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி தனது முதல் 2 ஆட்டங்களில் ஒரு வெற்றி மற்றும் ஒரு தோல்வி கண்டிருந்தது. இதனையடுத்து இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானுடன் மோதியது. இந்த ஆட்டம் டிராவில் முடிந்தது. இதனால் இந்திய அணி தனது பிரிவில் 2-வது இடத்தை பிடித்தது. ஈரான் முதலிடத்தை பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்தியா அடுத்து 3-வது இடத்துக்கான ஆட்டத்தில் விளையாட உள்ளது.

## யூகி பாம்ப்ரி ஜோடி தோல்வி

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி-நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் ஜோடி, பிரிட்டனின் நீல் கப்ஸ்கி-ஜோ சாலிஸ்பெரி ஜோடியுடன் மோதியது. இதில் சிறப்பாக ஆடிய யூகி பாம்ப்ரி ஜோடி முதல் செட்டை7-6 (7-2) என வென்றது.

இதில் சுதாரித்துக் கொண்ட பிரிட்டன் ஜோடி அடுத்த இரு செட்களை 7-6 (7-5), 6-4 என வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. கிராண்ட்ஸ்லாம் போட்டியில் யூகி பாம்ப்ரி முதல் முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலேசியாவை வீழ்த்தியது இந்தியா

12-வது ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி பீகார் மாநிலம் ராஜ்கிர் நகரில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் தலா ஒரு முறை மோதின. லீக் சுற்று முடிவில் இந்தியா 9 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து சூப்பர் 4 சுற்றை எட்டியது. நேற்று நடந்த போட்டியில் இந்தியா, தென் கொரியா அணிகள் இடையிலான ஆட்டம் 2-2 என சமனில் முடிந்தது.

இந்நிலையில், சூப்பர் 4 சுற்றில் இன்று நடந்த போட்டியில் இந்தியா, மலேசியா அணிகள் மோதின. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தியது. மன்தீப் சிங், சுக்ஜீத் சிங், ஷிலானந்த் லக்ரா மற்றும் விவேக் சாகர் பிரசாத் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

### தமிழக அரசின் மருத்துவக்கல்வி இயக்குனராக

# டாக்டர் சுகந்தி ராஜகுமாரி நியமனம்

**சென்னை, செப். 06-**

தமிழக அரசின் மருத்துவக்கல்வி இயக்குனராக பணியாற்றி வந்த டாக்டர் சங்குமணி, கடந்த ஜூன் மாதம் 30-ந் தேதி ஓய்வு பெற்றார். இதைத்தொடர்ந்து, அப்பணியிடத்துக்கு டாக்டர் சுகந்தி ராஜகுமாரி என்பவரை நியமித்து தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் செந்தில்குமார் உத்தரவு பிறப்பித்தார்.

அதன்படி, டாக்டர் சுகந்தி ராஜகுமாரி மருத்துவக்கல்வி இயக்குனராக நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். கன்னியாகுமரி மாவட்டம் வடக்கு சூரங்குடி கிராமத்தைச் சேர்ந்த இவர், கடந்த 36 ஆண்டுகளாக மருத்துவக்கல்வி பணியில் உள்ளார். தமிழகத்தில் உள்ள பல்வேறு அரசு மருத்துவக்கல்லூரிகளில் தோல் மருத்துவத்துறையில் பேராசிரியர் மற்றும் துறை தலைவராக பணியாற்றிய அவர், கடந்த 2019-ம் ஆண்டு பதவி உயர்வு பெற்று கன்னியாகுமரி மருத்துவக்கல்லூரி டீனாக பொறுப்பேற்றார்.

கடைசியாக, திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி டீனாக பதவி வகித்தார். மருத்துவக்கல்வி கூடுதல் இயக்குனராகவும் அவர் பதவி வகித்துள்ளார். புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட டாக்டர் சுகந்தி ராஜகுமாரிக்கு, மருத்துவக்கல்வி இயக்குனரகத்தின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

### ரூ.60 கோடி மோசடி வழக்கு:

# நடிகை ஷில்பா ஷெட்டிக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ்

**மும்பை, செப். 06-**

மகாராஷ்டிரா தொழிலதிபரிடம், 60 கோடி ரூபாய் வரை மோசடி செய்ததாக, ஹிந்தி நடிகை ஷில்பா ஷெட்டி மற்றும் அவரின் கணவர் ராஜ் குந்த்ராவுக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரபல ஹிந்தி நடிகையான ஷில்பா ஷெட்டி, தன் கணவர் ராஜ் குந்த்ராவுடன் மகாராஷ்டிராவின் மும்பையில் வசித்து வருகிறார். இவர்கள் இருவரும், தன்னிடம் பெற்ற 60 கோடி ரூபாயை தராமல் மோசடி செய்ததாக மும்பை போலீசில் தொழிலதிபர் தீபக் கோத்தாரி, 60, என்பவர் புகாரளித்தார்.

டீல் 'டிவி' பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்துக்கு 60 கோடி ரூபாய் கடனாக வாங்கி விட்டு, பின்னர் அந்த நிறுவனம் மீது திவால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் புகார் அளித்தார். மேலும், தன்னிடம் வாங்கிய 60 கோடி ரூபாயை, வேறு நிறுவனங்களில் ஷில்பா - ராஜ் தம்பதி முதலீடு செய்ததாகவும் அவர் குற்றம்சாட்டியிருந்தார்.இதையடுத்து, ஷில்பா ஷெட்டி, அவர் கணவர் ராஜ் குந்த்ரா மீது, மும்பை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஷில்பா ஷெட்டி, அவர் கணவர் ராஜ் குந்த்ராவுக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸை போலீசார் பிறப்பித்துள்ளனர். இருவரும் அடிக்கடி வெளிநாட்டு பயணம் மேற்கொள்வதால், வழக்கின் விசாரணையை சுமூகமாக நடத்துவதற்கு உதவியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கில் இளம் ஆய்வாளரான முனைவர் விக்னேஷ் கார்த்திக் ஆய்வு நடையில் வெளிப்படுத்திய நூல் உள்ளிட்ட 2 நூல்களை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.



மதுரை தெற்கு தொகுதிக்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு மாநகர் மாவட்ட பொருளாளரும், மாநில மாணவரணி இணை செயலாளருமான பா.குமார் ஜல்லிகட்டு சிலையை வழங்கி வரவேற்றார். அருகில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ உள்ளார்.

### ம.பி. அரசு மருத்துவமனையில்

# எலி கடித்து 2 குழந்தைகள் பலியான விவகாரத்தில் ராகுல்காந்தி ஆவேசம்

## பிரதமர் தலைகுனிய வேண்டும் என கருத்து

**போபால், செப். 06-**

ம.பி. அரசு மருத்துவமனையில் எலி கடித்து 2 குழந்தைகள் பலியான விவகாரத்தில் கருத்து தெரிவித்துள்ள ராகுல்காந்தி, இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று ஆவேசமாக தெரிவித்துள்ளார்.



மத்தியப் பிரதேச தலைநகர் இந்தூரில் மகாராஜா யஷ்வந்த்ராவ் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகள் வார்டுக்குள் எலி கடிததத்தில் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் இதுகுறித்து தனதுஎக்ஸ் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி,

''மத்தியப் பிரதேசத்தின் மிகப்பெரிய அரசு மருத்துவமனையில் எலி கடித்து இரண்டு பிறந்த குழந்தைகள் இறந்தனர். இது தற்செயல் நிகழ்வு அல்ல, இது முழுமையான கொலை. இந்த சம்பவம் மிகவும் கொடூரமானது, மனிதாபிமானமற்றது மற்றும் அர்த்தமற்றது. இதைப் பற்றிக் கேள்விப்பட்டாலே முதுகுத்தண்டில் நடுக்கம் ஏற்படுகிறது.

சுகாதாரத் துறை வேண்டுமென்றே தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்போது சிகிச்சை பணக்காரர்களுக்கு மட்டுமே. ஏழைகளுக்கு, அரசு மருத்துவமனைகள் இனி உயிர் காக்கும் இடங்களாக இல்லை, ஆனால் மரணக் குகைகளாக மாறிவிட்டன. பிரதமர் மோடியும் மத்தியப் பிரதேச முதல்வரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். உங்கள் அரசாங்கம் நாட்டின் மில்லியன் கணக்கான ஏழைகளின் சுகாதார உரிமையைப் பறித்துவிட்டது. இப்போது குழந்தைகள் அவர்களின் தாய்மார்களின் மடியில் இருந்து பறிக்கப்படுகிறார்கள்'' என்று ராகுல் கடுமையாக சாடினார். இதற்கிடையே இந்த சம்பவம் குறித்து விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க இந்தூர் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# கர்நாடகாவில் வாக்குச்சீட்டுகள் மூலம் இனி உள்ளாட்சி தேர்தல்

## தேர்தல் ஆணையத்திற்கு அமைச்சரவை பரிந்துரை

**பெங்களூரு, செப். 06-**

உள்ளாட்சி தேர்தல்கள் வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்தியே நடைபெற வேண்டும் என்று மாநில தேர்தல் ஆணையத்திற்கு கர்நாடக அரசு பரிந்துரைத்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நம்பகத்தன்மையற்றவை என்றும் தெரிவித்துள்ளது.

தேர்தல்களில் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வகையில், வாக்குச்சீட்டுகளை மீண்டும் கொண்டுவர பரிந்துரைத்துள்ளதாக கர்நாடக சட்ட அமைச்சர் எச்.கே.பாட்டீல் கூறினார். அவர், ''உள்ளாட்சித் தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்குப் பதிலாக வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்த கர்நாடக அமைச்சரவை பரிந்துரைத்துள்ளது. மாநில தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கவும், தேவைப்பட்டால் திருத்தவும் அங்கீகாரம் அளித்துள்ளோம். ஏனெனில் மக்களின் நம்பகத்தன்மையை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அரித்துவிட்டது'' என்று அவர் கூறினார்.

கர்நாடகா முழுவதும் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் மாநில தேர்தல் ஆணையம், கர்நாடக அமைச்சரவையின் இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும். கர்நாடகாவில் 2024 மக்களவைத் தேர்தலில் மகாதேவபுரா சட்டமன்றத் தொகுதியில் வாக்கு திருட்டு நடந்ததாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி குற்றம் சாட்டினார். இக்குற்றச்சாட்டு அம்மாநிலத்தில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியது. மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்வியடைந்த பிறகு, காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் வாக்குச்சீட்டு நடைமுறைகளை கொண்டுவர வேண்டும் என கோரிக்கை விடுத்தது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்



தமிழக வெற்றி கழகத்தின் மாணவரணி இளைஞர் அணி மற்றும் தொண்டரணி நிர்வாகிகள் கூட்டம் பனையூரில் நேற்று பொதுச் செயலாளர் புஷி ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

# திருச்செந்தூர் கோவிலில் மீண்டும் தங்கத்தேர் பவனி

## தமிழக அமைச்சர்கள் துவக்கி வைத்தனர்



**திருச்செந்தூர், செப். 06-**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தங்கத்தேர் பவனி தொடங்க முடிவு செய்யப்பட்டது. தமிழக இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் சேகர்பாபு, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் தங்கத்தேர் பவனியை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தினந்தோறும் மாலை 6 மணியளவில் கிரி பிரகாரத்தில் தங்கத்தேர் பவனி நடைபெறுவது வழக்கம். ஆனால், திருச்செந்தூர் கோவில் பெருந்திட்ட வளாக பணிகளின் ஒரு பகுதியாக கோவில் கிரிபிரகாரத்தில் தரைத்தள மேம்பாட்டு பணிகள் நடைபெற்றதால் கடந்த 17.7.2024 முதல் தற்காலிகமாக தங்கத்தேர் புறப்பாடு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

தற்போது இந்த பணிகள் அனைத்தும் நிறைவு பெற்ற நிலையில், நேற்று முன்தினம் முதல் மீண்டும் தங்கத்தேர் பவனி தொடங்க முடிவு செய்யப்பட்டது. இதையொட்டி நேற்று மாலை சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி தெய்வானையுடன் தங்கத்தேரில் எழுந்தருளினார். பின்னர் சுவாமி அம்பாள்களுக்கு சிறப்பு தீபாராதனை நடந்தது. தொடர்ந்து தமிழக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் தங்கத்தேர் பவனியை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர். இதையடுத்து ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து தங்கத்தேரை இழுத்தனர். தங்கத்தேர் கிரிபிரகாரத்தில் பவனி வந்து மீண்டும் நிலையை வந்தடைந்தது. நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலைத்துறை கூடுதல் ஆணையர் பழனி, கோவில் தக்கார் அருள் முருகன், இணை ஆணையர் ஞானசேகரன், தூத்துக்குடி மண்டல இணை ஆணையர் அன்புமணி, தி.மு.க. மாநில வர்த்தக அணி இணை செயலாளர் உமரி சங்கர், திருச்செந்தூர் நகராட்சி தலைவர் சிவ ஆனந்தி, துணை தலைவர் செங்குழி ரமேஷ் உள்பட திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

# திருமங்கலம் பி.கே.என். கல்லூரியில் ஆசிரியர் தினவிழா

**திருமங்கலம், செப்.06-**

பெருமைக்குரிய ஆசிரியப் பணிக்கு மென்மேலும் பெருமை தேடித் தந்த சர்வ பள்ளி டாக்டர்.எஸ்.ராதாகிருஷ்ணனின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் சிறப்புடன் செயல்பட்டு வரும் பி.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆசிரியர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப் பட்டது.

இதையொட்டி கல்லூரியில் கூட்ட அரங்கினில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவிற்கு பி.கே.என் கல்லூரி கமிட்டியின் தலைவர் ஆர்.தினேஷ் நாடார்ரூபவ் செயலாளர்(பொ) எம்.செல்வம் நாடார்ரூபவ்பொருளாளர் ஆர்.மணிசங்கர் நாடார் ஆகியோர் தலைமை வகித்தனர்.கல்லூரியில் முதல்வர் முனைவர் ஆர்.கணேசன் வரவேற்று பேசினார்.மைக்ரோபயாலஜி துறை உதவி பேராசிரியர் வி.ராஜேஸ்வரி சிறப்பு விருந்தினர் குறித்து உரையாற்றினார்.

கல்லூரியின் ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக நோய் எதிர்ப்பியல் பிரிவு உயிரியல் அறிவியல் பிரிவு இணை பேராசிரியர் மற்றும் துறை தலைவர் டாக்டர் எம்.ஜெயலட்சுமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆசிரியர் தின விழா சிறப்புரையாற்றினார்.இதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் மற்றும் உரை நிகழ்த்தியவர்களுக்கு பி.கே.என் கல்லூரியின் சார்பில் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.விழாவின் நிறைவில் கல்லூரியின் கணிணி அறிவியல் துறை உதவி பேராசிரியர் ஆர்.சியாமளா நன்றி கூறினார்.



**வ.உ.சி.யின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரையில் உள்ள அவரது உருவ சிலைக்கு தமிழ்நாடு யாதவ மகாசபை ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தலைவர் நாட்டாமை கே.ஜெயக்குமார் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதில் இளைஞரணி தலைவர் சீனிவாசன், பன்னீர்செல்வம், வெங்கடாசலம், வடக்கு மாசி வீதி சீனிவாசன், எவரெஸ்ட் கண்ணன், ஜெனிஃபர், கண்ணன், மணிகண்டன், ராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**



**நேதாஜி சுபாஷ் சேனையின் நிறுவனத்தலைவர் வழக்கறிஞர் டாக்டர் மகாராஜன் ஆணைக்கிணங்க வ.உ.சி.யின் 154-வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று மதுரை சிம்மக்கல்லில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாநில செயலாளர் எம்.சுமன்தேவர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் தத்தனேரி க.கார்த்திக், தினேஷ் பாண்டியன், செல்வ பாண்டியன், தத்தனேரி நிவாஸ் மற்றும் சோனை முத்து, தத்தனேரி தர்மா, ரத்தின வேல் பாண்டி, விக்னேஷ், மகா பிரபு, அருண், பாலா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

## கச்சத்தீவு விவகாரம்:

# கார்த்தி சிதம்பரம் எம்.பி கருத்து

**சிவகங்கை, செப். 06-**

கச்சத்தீவு ராஜாங்க ரீதியாக கொடுக்கப்பட்டது. அதை திரும்பப் பெறுவது சரிவராது என சிவகங்கை எம்.பி. கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஜிஎஸ்டி குறைக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. இதனால் பொருட்களின் விலை குறையும். எனினும், இது தாமதமாக எடுக்கப்பட்ட முடிவு. பணமதிப்பிழப்பு, கரோனா பரவல் காலத்தில் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டது. அப்போதே ஜிஎஸ்டி-யை குறைத்திருக்க வேண்டும். மருத்துவக் காப்பீடு திட்டங்களுக்கு வரி விலக்கு அளித்தது வரவேற்கத்தக்கது. வரி விலக்கு பட்டியலில் உள்ள பொருட்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் தமிழகத்துக்கு அதிக முதலீடு வந்துள்ளது. பழனிசாமி ஆட்சி காலத்தில் வந்த முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். தமிழகத்தில் பா.ஜ.க. எந்த கட்சியுடன் கூட்டணி வைத்தாலும், அது தோற்கும். பா.ஜ.க.வை தமிழக மக்கள் ஏற்க மாட்டார்கள். கச்சத்தீவு ராஜாங்க ரீதியாக கொடுக்கப்பட்டது. அதை திரும்பப் பெறுவது சரி வராது. இவ்வாறு அவர் கூறினார்.

# நத்தம் அருகே வெற்றி விநாயகர் கோவிலில் கும்பாபிஷேகம்



**நத்தம், செப்.06-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே வத்திபட்டியில் கே.கே.நகரில் அமைந்துள்ள வெற்றி விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது. விழாவில் முதல் நாள் அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, மஹா பூர்ணாகுதி கணபதி ஹோமம் மற்றும் முதல் காலயாகசாலை பூஜைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து 2-ம் நாள் இரண்டாம் கால யாகசாலை பூஜைகளை தொடர்ந்து பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்த குடங்கள் மேளதாளம் முழங்க கோபுர உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது. பின்னர் அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க குடம், குடமாக புனித தீர்த்தங்கள் கலசத்தில் ஊற்றப்பட்டது. இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். அவர்களுக்கு புனித தீர்த்தமும், பூஜை மலர்களும், அன்னதானமும் வழங்கபட்டது. தொடர்ந்து மூலவருக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. விழாவிற்கான ஏற்பாடுகளை வத்திபட்டி கே.கே.நகர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் செய்திருந்தனர்.

# முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கருத்திற்கு உசிலம்பட்டி எம்.எல்.ஏ அய்யப்பன் வரவேற்பு

**திருமங்கலம், செப்.06-**



முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ள கருத்திற்கு ஓ.பி.எஸ் அணியின் உசிலம்பட்டி எம்.எல்.ஏ பி.அய்யப்பன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றிக்கு, தமிழகத்தில் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியில் அமர்வதற்கு மறப்போம் மன்னிப்போம் என்ற முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வழியைப் பின்பற்ற வேண்டும். அ.தி.மு.க. விலிருந்து பிரிந்தவர்களை அரவணைக்க வேண்டும்." என்று கே.ஏ.செங்கோட்டையன் வே ண்டுகோள் விடுத்துள்ளார். இந்த கருத்து தமிழக அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஓ.பி.எஸ் அணியின் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி.அய்யப்பன் சமூக வலைத்தளங்கள் மூலமாக கருத்து தெரிவித்துள்ளார். அதில்

கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.செங்கோட்டையன் அவர்களின் கருத்து, ஒவ்வொரு தொண்டனின் அடிமனதில் குவிந்திருக்கும் விருப்பம். இதை நான் ஒரு தொண்டனாக மனதார வரவேற்கிறேன்.

நமது கழகம் வலிமை பெற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுகளை நனவாக்கிட அனைத்து கழக உண்மை தொண்டர்களும் விருப்பு, வெறுப்புகளை விலக்கி ஒன்றிணைவோம், வென்று காட்டுவோம் என்று தெரிவித்துள்ளார்.




**திண்டுக்கல்லில் சுதந்திர போராட்ட தியாகி வ.வு.சி யின் 154-வது பிறந்தநாள் முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு கழக பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன், கழக துணை பொது செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா.விசுவநாதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக அமைப்பு செயலாளர் வி.மருதராஜ், மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி பரமசிவம், மாநகராட்சி எதிர்க்கட்சித்தலைவர் சி.எஸ்.ராஜமோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.**

## அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்திருந்தால்

# பெரியாறு அணை நீர்மட்டம் மேலும் உயர்த்தப்பட்டிருக்கும்

## ஆண்டிபட்டியில் இ.பி.எஸ். பேச்சு



**ஆண்டிபட்டி, செப். 06-**

அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்திருந்தால் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்த்தப்பட்டு 5 மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பும், கனவும் நிறைவேறி இருக்கும் என்று ஆண்டிபட்டியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

"மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்பதை வலியுறுத்தி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி மாநிலம் முழுவதும் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நேற்று முன்தினம் இரவு (செப்.4) பிரச்சாரம் செய்து அவர் பேசியதாவது:-

இங்கு கூடியுள்ள தொண்டர்கள் கூட்டம் வரும் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றியை உறுதிப்படுத்தி உள்ளது. ஆண்டிபட்டி தொகுதிக்கு என்று தனி வரலாறு இருக்கிறது. எம்ஜிஆர், ஜெயலலிதா என்று அரசியல் வரலாற்றிலேயே இரண்டு முதல்வர்களை தந்த தொகுதி இது. ஆண்டிபட்டி அ.தி.மு.க.வின் எஃகு கோட்டை. எத்தனை கட்சிகளுடன் தி.மு.க. கூட்டணி வைத்தாலும் வரும் தேர்தலில் வெற்றி பெற முடியாது. தி.மு.க. ஆட்சிக்கு வந்து 51 மாதம் முடிந்து விட்டது. இந்த ஆட்சியில் ஆண்டிபட்டி தொகுதிக்கு எந்த திட்டத்தையும் கொண்டு வரவில்லை.

5 மாவட்டங்களின் நீராதாரமாக முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உச்ச நீதிமன்றம் வரை சென்று சட்டப் போராட்டம் நடத்தினார். இதனடிப்படையில் அணையை பலப்படுத்திவிட்டு 142 அடி உயர்த்திக் கொள்ளலாம் என்ற தீர்ப்பு கிடைத்தது.

நான் முதல்வராக இருந்தது போது பேபி அணையைப் பலப்படுத்த ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் தொடங்கின. கேரள முதல்வரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது. ஆட்சி தொடர்ந்திருந்தால் நீர்மட்டம் உயர்த்தப்பட்டு 5 மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பும், கனவும் நிறைவேறி இருக்கும்.

ஆனால் ஆட்சிக்கு வந்த தி.மு.க. நீர்மட்டத்தை உயர்த்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்தியா கூட்டணியில் தானே கம்யூனிஸ்ட் கட்சியும் தி.மு.க.வும் உள்ளது.

ஏன் இது குறித்து தி.மு.க., கேரள அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அவர் நினைத்தால் கேரள அரசுடன் பேசி எளிதில் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால் ஸ்டாலின் தனது குடும்பம், அதிகாரம் ஆகியவற்றுக்காகவே கூட்டணியில் இருந்து வருகிறார். அதனால் பெரியாறு அணை விஷயத்தில் அவர் அக்கறை காட்டுவதில்லை.

அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளின் பங்கேற்புடன் குடிமராமத்துப் பணி, மும்முனை மின்சாரம், சொட்டு நீர் மானியம், இலவச ஆடு, மாடு, கோழி, மடிக்கணினி என்று ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினோம். அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும் தொழில் வளம் பெருக நடவடிக்கை எடுக்கப்படும். இளைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் மினி கிளினிக்குகள் திறக்கப்படும்.

தி.மு.க. ஆட்சியில் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்து விட்டது. ஆரம்பத்திலேயே இதை சட்டமன்றத்தில் கூறினேன். ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் தமிழக இளைஞர்கள் கஞ்சாவுக்கு அடிமையாகி சமுதாயத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சிறுமி முதல் மூதாட்டி வரை பாதுகாப்பு இல்லாமல் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. காவல்துறைகளின் கைகள் கட்டப்பட்டுள்ளன.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இந்நிலை அனைத்தும் மாறும். பெட்ரோல் விலை குறையவில்லை. மாதம் ஒரு முறை மின் அளவீடு, கல்விக் கடன் ரத்து உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. ஆனால் 98 சதவீதம் தேர்தல் வாகுறுதிகளை நிறைவேற்றியதாக பொய் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். ஆண்டிபட்டி ஒன்றியப் பகுதிகளுக்கு முல்லை பெரியாற்றில் இருந்து நீர் கொண்டு வரப்படும். வைகை அணை தூர்வாரப்பட்டு நீரை அதிகளவில் தேக்க நடவடிக்கை எடுக்கப்படும். நெசவாளர்களுக்கு இலவச வீடு உள்ளட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும். என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், தேனி கிழக்கு மாவட்டச் செயலாளர் முருக்கோடை ராமர், கிழக்கு, மேற்கு ஒன்றியச் செயலாளர்கள் வரத ராஜன், லோகிராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இ.பி.எஸ். முடிவே எங்கள் முடிவு:

# செங்கோட்டையன் விவகாரத்தில் திண்டுக்கல் சீனிவாசன் கருத்து

**திண்டுக்கல், செப். 06-**

செங்கோட்டையன் கருத்து குறித்து, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எடுக்கும் முடிவே எங்கள் முடிவு, அவரது கருத்தே எங்கள் கருத்து என, முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்ட தியாகி வ.உ.சிதம்பரம் பிறந்த தினத்தை முன்னிட்டு அ.தி.மு.க. சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி திண்டுக்கல்லில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் நத்தம் ஆர்.விசுவநாதன், அமைப்புச் செயலாளர் மருதராஜ், முன்னாள் எம்எல்ஏ.,க்கள் அ.தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

வ.உ.சி., சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த பின் திண்டுக்கல் சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அ.தி.மு.க.வில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கூறியுள்ளார். இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தான் முடிவெடுக்க வேண்டும். நாங்கள் எடப்பாடி பழனிசாமி கூறும் கருத்துக்கு கட்டுப்படுவோம்.

செங்கோட்டையன் அவரது கருத்தை கூறியுள்ளார். இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் முடிவு எடுப்பார். அவரது முடிவே எங்கள் முடிவு, இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து திண்டுக்கல்லில் நடந்த கோபாலநாயக்கரின் 221 வது நினைவு தின நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி.சீனிவாசன், நத்தம் ஆர்.விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். அங்கு செய்தியாளர்களிடம் திண்டுக்கல் சி.சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "அனைவரும் ஒன்றிணைவது குறித்து முடிவெடுக்க வேண்டும் என செங்கோட்டையன் கூறியுள்ளார். இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் தான் முடிவெடுக்க வேண்டும். நாங்கள் அத்தனைபேறும், பொதுச்செயலாளர், எடப்பாடி பழனிசாமியின் முடிவுக்கு கட்டுப்படுவோம். அவர் என்ன முடிவெடுக்கிறாரோ அதுதான் எங்கள் முடிவு. எடப்பாடியார் கருத்துதான் எங்கள் கருத்து." என்றார்.

# பஸ்சில் இருந்து தவறி விழுந்து கல்லூரி மாணவர் பலி

**விருதுநகர், செப்.06-**



திண்டுக்கல் மாவட்டம் அய்யன்குளத்தை சேர்ந்தவர் மனோஜ் குமார் 18. இவர் சிவகாசி ஆணை கூட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் டிப்ளமோ பிசியோதெரபி படித்து வந்தார்.

இவர் நேற்று மாலை தனியார் பஸ்சில் முன்பக்கம் ஏறி சென்ற போது கைநழுவி ரோட்டில் விழுந்து பின்பக்க பஸ் டயரில் நசுங்கி பலியானார். ஆமத்தூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.




இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா மற்றும் கருத்தரங்கு நிகழ்ச்சியில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இவ்விழாவில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, ஆக்ஸ்ஃபோர்டு பல்ககலைக்கழகத்தின் பேராசிரியர் ஃபைசல் பிரேம்ஜி, பேராசிரியர் ஜிம் லெனின்ஸ், கல்வியாளர் பிரமிளா பெஸ்டர், பேராசிரியர் ஆ.இரா.வெங்கடாசலபதி, பேராசிரியர் கார்த்திக் ராம் மனோகரன், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.



இந்திய சுதந்திரத்திற்காக போராடிய கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் 154-வது பிறந்த நாளான நேற்று அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி, தேனி மாவட்டம் பழனிசெட்டிப்பட்டியில் உள்ள தனியார் விடுதியில் வைக்கப்பட்டிருந்த வ.உ.சிதம்பரனாரின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.




சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நேற்று நடைபெற்ற விழாவில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 2,810 பணிநாடுநர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் பணிக்கான பணி நியமன ஆணைகளை வழங்குவதன் அடையாளமாக 40 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா, பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரைக்கு எழுச்சி பயணம் மேற்கொள்ள வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற மாநில துணைச்செயலாளர் அன்னபூர்ணா தங்கராஜ் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அருகில் முன்னாள் அமைச்சரும், தமிழக சட்டமன்ற எதிர்கட்சி துணை தலைவருமான ஆர்.பி.உதயகுமார் உள்ளார்.

### நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்:

# கூடுதலாக 2,500 பேருக்கு ஆணைகளை வழங்கினார் துணை முதல்வர் உதயநிதி

சென்னை, செப். 06-

நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு அரசின் சார்பாக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நலிந்த கலைஞர்களுக்கு மாதம் தோறும் 3,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 6,542 நலிந்த கலைஞர்கள் மாதம் தோறும் 3,000 ரூபாய் நிதியுதவி பெற்று பயனடைந்து வருகின்றார்கள். முதல்வர் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், நிதியுதவி பெற விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்த அனைத்துக் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிடும் வகையில், 2025-2026ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்திற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட, தகுதி வாய்ந்த 2,500 நலிவுற்ற நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டது. இந்த நிலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நேற்று (5.9.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் விஜயா தாயன்பன், அருங்காட்சியங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் கவிதாராமு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள

# ரூ.13 ஆயிரம் கோடி...(1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழநாட்டில் அதன் 3-வது முதலீட்டினை செய்துள்ளது. இது மாநிலத்தின் திறன் வளர்ச்சி மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத்தின் மீது உள்ள வலுவான நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

### 1,493 வேலைவாய்ப்புகள்

இந்த முதலீடுகள் இங்கிலாந்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் சந்திப்புகளின்போது வெளியிடப்பட்ட முந்தைய அறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்,

இது ஜி.சி.சி.க்கள், உற்பத்தி, ஜவுளி தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு கல்வி போன்ற துறைகளில் 1,493 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 820 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளது.

### 15,320 நபர்களுக்கு வேலை

இங்கிலாந்து பயணத்திற்கு முன்பாக, முதல்வர் தலைமையிலான குழு 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஜெர்மனியிலிருந்து 7,020 கோடி ரூபாய் முதலீட்டுகளை ஈர்த்துள்ளது.

இவை விண்வெளி, விரிவான தொழில்நுட்பம், ரெயில்வே, ஆட்டோமொடிவ் மற்றும் மின்னணுவியல் உள்ளிட்ட முக்கிய துறைகளை உள்ளடக்கியது ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் புதிய உச்சத்தில் தங்கம் விலை: ஒரு சவரன் ரூ.79 ஆயிரத்தை நெருங்கியது

சென்னை, செப். 06-

தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து புதிய உச்சத்தை பதிவு செய்துள்ளது.

தங்கம் விலை கடந்த மாதம் (ஆகஸ்ட்) 26-ந்தேதியில் இருந்து கிடுகிடுவென உயர்ந்து வந்தது.

அதிலும் கடந்த மாதம் 29-ந்தேதியில் இருந்து ஒவ்வொரு நாளும் புதிய உச்சத்தில் தங்கம் விலை இருந்தது.

அந்த வகையில் நேற்று முன்தினம் வரலாறு காணாத வகையில் ஒரு சவரன் ரூ.78 ஆயிரத்தை தாண்டியது.

9 நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் தங்கம் விலை சற்று குறைந்தது. அதன்படி, நேற்று முன்தினம் தங்கம் விலை கிராமுக்கு ரூ.10-ம், சவரனுக்கு ரூ.80-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.9,795-க்கும், ஒரு சவரன் ரூ.78,360-க்கும் விற்பனையானது.

இந்த நிலையில் நேற்று தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து புதிய உச்சத்தை பதிவு செய்துள்ளது.

அதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.560 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.78,920-க்கு விற்பனையானது.

கிராமுக்கு ரூ.70 உயர்ந்து, ரூ.9,865-க்கு விற்பனையானது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.137-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 37 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

இதே வேகத்தில் சென்றால் இன்னும் சில நாட்களில் தங்கம் விலை ஒரு கிராம் ரூ.10 ஆயிரத்தை தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நீட் தேர்வைவிட கொடூரமானது:

# ஆசிரியர் தகுதித்தேர்வு குறித்து பேரவைத்தலைவர் மு.அப்பாவு

திருநெல்வேலி, செப்.06-

நீட் தேர்வைவிட கொடூரமானது ஆசிரியர் தகுதித் தேர்வு. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தகுதியை நிர்ணயிக்கும் உச்ச நீதிமன்றம் தனியார் பள்ளிகளுக்கு என்ன தகுதியை நிர்ணயித்துள்ளது? கல்விக் கொள்கைகள் மாநில அரசிடம் இருந்தால் மட்டுமே இது போன்ற விஷயங்களை சரி செய்ய முடியும் என்று தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.



சுந்தரப் போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரின் 154 ஆவது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி நெல்லை ஸ்ரீபுரம் பகுதியில் அமைந்துள்ள வ. உ. சிதம்பரனாரின் மணி மண்டபத்தில் அவரது முழு உருவ சிலைக்கு அரசு சார்பில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு மாலை அணித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: வ. உ. சி. மணிமண்டபத்தின் வளாகத்தில் மாணவர்கள் உயர் கல்வி படிப்பதறகாக அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டிற்காக தியாகம் செய்த வ. உ. சிதம்பரனாரின் பெருமையை பறைசாற்றும் வகையில் தமிழக அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மத்திய ஜி.எஸ்.டி வரியை குறைத்திருக்கிறது. மத்திய அரசே 8 ஆண்டுகளாக வட்டியை கூட்டி வைத்துவிட்டு இப்போது குறைத்துள்ளது. மக்களை கசக்கி பிழிந்து வரியை வசூலித்தனர். அதனை என்ன செய்தார்கள் என தெரியவில்லை. இப்போது வரியை குறைத்ததாக விளம்பரம் செய்கிறார்கள். வரி குறைப்பால் மாநில அரசிற்கும் மக்களுக்கும் நன்மை கிடைக்குமா என தெரியவில்லை. எதை செய்தாலும் மத்திய அரசுக்கு தான் நன்மை கிடைக்கும். இது மக்களுக்கும் மாநில அரசுக்கும் நன்மையான காரியம் கிடையாது.

மாநில அரசுதான் மாநிலத்தில் உள்ள அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் கல்வியை கொடுக்கிறது. தமிழகத்தில் காலை சிற்றுண்டி முதல் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது.

வரியை குறைவாகத்தான் மாநில அரசுக்கு மத்திய அரசு ஒதுக்கிறது . மத்திய அரசிற்கு வருமான வரித் துறை வருவாய், பெட்ரோலிய பொருள்களின் வருவாய் உள்ளிட்டவை மூலம் வருவாய் வந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து மாநில அரசுகளுக்கு பங்கு கொடுப்பது கிடையாது.

ஜி.எஸ்.டி. வருவாய் மூலம் 50 சதவீதம் மாநில அரசிற்கு நிதி பகிர்மானம் இருந்து வருகிறது. மத்திய அரசுக்கு வரி வருவாய் மூலம் கிடைக்கும் பணத்தில் எந்த செலவும் கிடையாது.

விமானம், ரயில்வே உள்ளிட்டவைகள் மூலம் தொடர்ந்து மத்திய அரசிற்கு வருவாய் வந்து கொண்டு தான் இருக்கிறது. கோடி கோடியாக வருவாய் கிடைத்து வருகிறது. ஆனால் பிரதமரின் நண்பர்களுக்கு நிதியை கொடுத்து அவர்களுக்கு தள்ளுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். நிதி பகிர்மானம் மத்திய அரசிற்கு 25 சதவீதம், மாநில அரசிற்கு 75 சதவீதம் என இருக்க வேண்டும்.

நிதி மாநில அரசுக்குதான் நிதி தேவை. விமான நிலையம் அனைத்தும் அதானிக்கு கொடுக்கப்பட்டு விட்டது பொதுத்துறை நிறுவனங்களுக்கு செலவு செய்வதற்கான தேவைகள் எதுவும் கிடையாது. மாநில அரசுதான் சுய உதவி குழுக்களுக்கு, விவசாயிகளுக்கு கடனை தள்ளுபடி செய்கிறது.

தி.மு.க. அரசு கொள்கை பிடிப்போடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை பெரியார் காமராஜர் கலைஞர் வழியில் முதல்வர் ஸ்டாலின் ஆட்சி செய்து வருகிறார். நாட்டில் தமிழகத்தில் தான் பெண்கள் அதிகயளவில் வேலைக்கு செல்கிறார்கள். தமிழகம் கல்விக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

நீட் தேர்வைவிட கொடூரமானது ஆசிரியர் தகுதித் தேர்வு. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தகுதியை நிர்ணயிக்கும் உச்ச நீதிமன்றம் தனியார் பள்ளிகளுக்கு என்ன தகுதியை நிர்ணயித்துள்ளது? கல்விக் கொள்கைகள் மாநில அரசிடம் இருந்தால் மட்டுமே இது போன்ற விஷயங்களை சரி செய்ய முடியும் என்றார்.



வ.உ.சி.யின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரையில் உள்ள அவரது உருவசிலைக்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் நிர்வாகிகள் மாலை அணவித்து மரியாதை செய்தனர். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.